# ஷிக்வா



முறையீடு

கவியரங்கக் கவிதைகள்

பதிப்பாசிரியர்

**எம்.எஸ்.எம்.அனஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THAJUL - ATHEEB, KALA BOOSHANAM
S. A. R. M. Seyed Hassan Moulana J.P.
No : 100, " Sadaat Path " Nintavur - 12,
Sri Lanka. Tel : 067-50373

122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிக்வா

# SHIKVA

## முறையீடு

### கவியரங்கக் கவிதைகள்

பதிப்பாசிரியர்:

**எம். எஸ். எம். அனஸ்**

வெளியீடு:

**இலங்கை தென்கிழக்கு ஆய்வமைய**
**மதியுரைக்குழு,**
**மீவத்துற, பேராதனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Shikva" :- Collection of Poems Presented at Poerty (Forum)

Editor :- **Dr. M.S.M. Anes, Senior Lecturer**
Department of Philosophy,
University of Peradeniya

First :- Copy Right

Copy Right :- Editor

Number of pages :- 84 + 18 = 102

Size of The Book :- 1/8

Publication :- South Eastern Research Forum
Advisory board to the Allama Iqbal
National conference.

Printer :- Kumaran Press (PVT) Ltd.
Colombo.

Price :- 125/=

ISBN :- ISBN 955-97264-0-4

First Edition :- December 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இக்பால் சிந்தனைக்கு
இலங்கையிலும் தமிழ் நாட்டிலும்
வழிகாட்டிகளாயிருந்த
அறிஞர் எ.எம்.எ. அஸீஸ்
(இலங்கை)
ஆர்.பி.எம்.கனி
(தமிழ் நாடு)
ஆகியோருக்கு...

TAJUL - ATHEEB, KALA BOOSHANAM
S. A. R. M. Seyed Hassan Moulana J.P.
No :100, " Sadaat Path " Nintavur - 12,
Sri Lanka. Tel : 067-50373

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இலங்கை தென்கிழக்கு ஆய்வமையம் யுத்தம் சார்ந்த தென்கிழக்குப் பிரதேசத்தில் நின்று செயற்பட்டாலும் அதன் எல்லைகளுக்கப்பால் சென்று எது தடையாக இருந்தாலும் அந்தக் குறிக்கோளை நிறை வேற்றுவதிலே மறுமலர்ச்சிப் பாதையைக் கண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அல்லாமா இக்பாலின் நவீன அறிவியல் சிந்தனைகள் மறக்கப் பட்டடிருந்த ஒரு காலமெனக் கருதுகின்ற சந்தர்ப்பத்தில்தான் பேராதனை பல்கலைக்கழக மெய்யியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எம். எஸ். எம். அனஸ் அவர்கள் எம்மை அழைத்து அல்லாமா இக்பால் பற்றிய ஆராய்ச்சி மாநாடொன்று நடாத்தப்பட வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தார்.

அந்த வேண்டுகோளைத் தொடர்ந்து பேராதனை பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் தேசியமட்டத்தில் மதியுரைக் குழுவொன்றைத் தெரிவு செய்தோம். அதன் பின்னர் கண்டி ஒராபி பாஷா நிலையத்தில் 10-02-1998 அன்று மாநாட்டு அறிமுக விழாவும் விசேட கவியரங்கும் நடைபெற்றது. அன்று நடைபெற்ற கவியரங்கு நிகழ்ச்சிக்கு பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் தலைமை தாங்கினார். இதில் இலங்கையின் மூத்த பிரபல கவிஞர்கள் உட்பட, பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவ, மாணவியரும் பங்கேற்றனர். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முஸ்லிம் சமய கலாசார மேலதிகச் செயலாளர் ஏ. சீ. எம். றாசிக் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு. எஸ். வன்னியக்குலம், ஒராபி பாஷா பணிப்பாளர், கலாபூஷணம் எஸ். எம். ஏ. ஹஸன், ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ.எல். கலிலுர்ரஹ்மான் M.A. இலங்கை ஒலிரபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அல்ஹாஜ் நூராணிய ஹசன், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா.அ. இராமன். கண்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளர் அல்ஹாஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.நசார் ஆகியோருடன் இன்னும் முக்கிய பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழா நிகழ்வுகளில் மற்றுமொரு சிறப்பம்சமாக கலாபூஷணம் எஸ்.எம்.ஏ ஹசன் அவர்கள் கண்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளர் அல்ஹாஜ் ஏ. நசார் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அல்லாமா இக்பால் மாநாட்டு மதியுரைக் குழுவின் தலைவர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களின் அல்லாமா இக்பால் பற்றிய பிரதான உரை இடம்பெற்றது. அதனைத் தொடந்து பிரதம அதிதி ஏ.சீ.எம். றாசீக் அவர்கள் தமது சிறப்புப் பேச்சினை நிகழ்த்தினார்.

உலகளாவிய முஸ்லிம்களிடத்தில் போர்க்கள மேகங்கங்கள் திரண்டு நிற்கும் இந்தக்கால ஓட்டத்துடன் இன்றைய இலங்கையின் செயற்பாடுகள் பற்றியும் ஒப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒற்றுமைகள் புலப்படும் கவிதைகளை இவ்விரங்கில் பங்கேற்றவர்கள் பாடினர். அதுவெறும் கோஷங்களாக மட்டும் நில்லாமல் பிரக்ஞைபூர்வமான உணர்வின் வெளிப்பாடாகவே இருந்தன. உண்மையிலேயே அது பதிவுகளாக்கப்படும்போதுதான் பார்வைகள் விரிவு பட்டு முஸ்லிம் மக்களின் விருப்புவெறுப்புகள் பற்றிய சிந்தனைகள் அதன் எல்லைகளைக் கடந்து புதிய வழி பிறக்க வழி வகுக்கத் தூண்டும். அதுவேதான் எமது இக்பால் மாநாட்டினுடைய முழு நோக்கமும் ஆகும்.

கவியரங்கில் பாடப்பட்ட கவிதைகளோடு அரங்கில் அரங்கேறா மூன்று கவிதைகளும் இங்கு இணைத்து தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

இந்நூல் தோற்றம் பெறுவதற்கு உதவி புரிந்த அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவின் பொதுச் செயலாளரும் அல்லாமா இக்பால் மாநாட்டின் போசகர் குழு உறுப்பினருமான ஏ. எல். கலீலுர்ரஹ்மான் அவர்களுக்கும் எங்கள் அன்பான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

தமிழ் நாட்டில் இதை அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குத்துணை நின்ற சகோதரர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு இக்கவியரங்கு நிகழ்வு பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய வீரகேசரி ஞாயிறு இதழ் ஆசிரியர் வீ. தேவராஜ், தினகரன் உதவி ஆசிரியர்களான எம். எச். எம். ஷம்ஸ் என். எம். அமீன் ஆகியோருடன், செய்தியாளர்களான க. ப. சிவம், மன்சூர், ஸ்டார் ராசிக், எம். ஐ. எம். முசாதிக் ஆகியோருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

மிகக்குறுகிய காலத்தில் இந்நூலை கணனியாக்கம் செய்துதவிய அஸ்ஸலபிய்யா கணனி நிலைத்தில் கடமையாற்றுகின்ற சகோதரர்களான றிழ்வான், றொசான், ஐ. எல். எம். பாறுக், எஸ். முர்சஷித் ஆகியோருக்கும் எங்கள் நன்றி.

இன்னும் இக்வியரங்கின் போது எமது பல ஏற்பாட்டு முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய புட்லண் உரிமையாளர் என்.எம்.எம். மன்சூர் அவர்களுக்கும், ஒறாபி பாஷா நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், ஒறாபி பாஷா நிலைய அலுவலர்கள் அதில் பயிற்சி பெறும் மாணவிகள் ஆகியோருக்கும், இன்னும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி மாணவ, மாணவியர் அனைவருக்கும் எமது உளம்கனிந்த நன்றி உரித்தாகுக.

*அன்புடன்*

**இக்பால் அலி , பி. எம். ஜமாஹிர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர்

நவீன யுகத்தின் சவால்களுக்கு இஸ்லாத்திலிருந்து கிடைக்கக்கூடிய பதில்களும் நவீன யுகத்தின் நியாயமான சிந்தனைகளிலிருந்து இஸ்லாமிய பண்பாட்டு நிர்மாணத்திற்கென உள்வாங்கக்கூடிய கருத்தாக்கங்களும் என்ற பரஸ்பர உணர்வை நம் காலத்திற்கேற்றவாறு சிந்தித்தவர் அல்லாமா இக்பால்.

ஏனைய முஸ்லிம் சிந்தனையாளர்களிலிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டும் பிரதான எல்லைக்கோடு இதுவாகும். இக்பாலின் சிந்தனைகள் மீள வலியுறுத்தப்பட வேண்டிய தேவையை இச்சிறப்பு நிலை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இக்பாலின் சிந்தனைகளை இளந்தலைமுறையினருக்குச் சொல்வதற்கென சில நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இக்பால் ஆராய்ச்சி மாநாடு, இக்பால் ஆய்வுக்கட்டுரை வெளியீடு, இக்பால் கவிதைகள் மொழிபெயர்ப்பு என்பன அத்திட்டங்களில் சிலவாகும். இவ்வரிசையில் இம்முயற்சியை சமூகமயப்படுத்துவதற்கு என நடத்தப்பட்டது ஷிக்வா (முறையீடு) கவியரங்கமாகும். இந்த கவியரங்கினுடைய ஷிக்வா என்ற தலைப்பு நண்பர் கலாநிதி எம். ஏ. நுஹ்மான் அவர்களின் தெரிவாகும். இது எமது எண்ணத்தைச் சிறந்த முறையில் பிரதிபலித்ததால் இக்பாலின் சொந்தக் கவிதைத்தலைப்பான ஷிக்வாவே கவியரங்கத் தலைப்புமாகியது.

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட 53வது விரிவுரை அறையில் (1998) நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளிலிருந்து இக்பால் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயலுருவாக்கும் பாங்கில் பங்குகொள்வதற்கு தென்கிழக்கு ஆய்வமையம் முன்வந்ததுடன் இதற்கென இக்பால் மாநாட்டு மதியுரைக் குழுவை அகில இலங்கை ரீதியில் உருவாக்கும் முயற்சியையும் ஆரம்பித்தது.

ஆய்வமையத்தின் பிரதான பிரமுகர்களான இக்பால் அலி, பி. எம். ஜமாஹிர் ஆகியோர் தொடர்ந்து வந்த எல்லாச் செயற்பாடுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியபங்காற்றினர். பேராதனைப் பல்கலைக்கழக இளம் விரிவுரையாளர் குழுவும், கண்டி ஒறாபிபாஷா நலன்புரிச் சங்கமும் இவ்விடயங்களில் தகுந்த முறையில் வழங்கிய உதவிகளுக்கு நன்றி கூறுவது எனது கடமையாகும்.

இத்திட்டங்களில் முதல் நிகழ்ச்சியே ஷிக்வா கவியரங்கமாகும், இலங்கையின் புகழ்பெற்ற பல கவிஞர்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இளம் கவிஞர்களும், பெண்கவிஞர்களும் இதில் பங்கேற்றமை மற்றொரு முக்கிய அம்சமாகும்.

'ஷிக்வா'(முறையீடு) என்ற தலைப்பு மாத்திரம்தான் கவிஞர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கருத்துக்களும், வடிவங்களும், குமுறல்களும் கவிஞர்களின் எண்ணங்களுக்கே சொந்தமானவை.

மூத்த கவிஞர்களான பண்ணாமத்துக் கவிராயர், ஏ. இக்பால், எம்.எச்.எம். ஷம்ஸ், மருதூர் ஏ. மஜீத் போன்றவர்களின் கவிதைகளில் இக்பாலின் சிந்தனைத் தாக்கங்களும் ஈடுபாடும் வெவ்வேறு வடிவங்களில் கவிதைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இளம் தலைமுறையினர் தமது கவிதைகளில் இக்பாலை அறியும் ஆவலை மட்டுமே வெளிப்படுத்தி உள்ளனர். இக்பால் சிந்தனைகளின் தாக்கம் புதிய தலைமுறையினரைச் சென்றடையவில்லை என்பதையே இது காட்டுகிறது.

"எங்கள் நூல் நிலையங்களில்
உனது நூல்கள் இல்லை"

என்ற இளம் கவிஞர் இக்பால் அலியின் வரிகள் இதைத்தான் நிரூபிக்கின்றன.

இங்குள்ள கவிதைகள் முறையீட்டு அவலக்குரல்கள் மட்டுமல்ல. அவை நீதியினதும், சமாதானத்தினதும் தேடல்களுமாகும். முஸ்லிம்களின் துயரங்களுக்காக அவை அவலக்குரல் எழுப்பினாலும் இலங்கையிலும் உலகிலும் மனிதகுலத்திற்கு எதிராக நடக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் அநியாயங்களுக்கும் எதிரான போர்க் குரல்களாகவும் அவை உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் என்ற வகையில் எவ்வளவு பிரச்சினைக் குரியதாயினும் தமது துயரை அவர்கள் சொல்லத் தயங்கவில்லை. வடபுலத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் அகதிகளின் பிரச்சினை கவிஞர்கள் அனைவரினதும் பொதுவான துயரமாக இருந்துள்ளதைக் காண முடிகிறது. ஜின்னாஹ் ஷரீபின் கவிதை இந்த அவலத்தை முழுமையான முறையீடாக முன்வைக்கிறது. அதேவேளை இலங்கையில் தமிழ் மக்கள் அடையும் துன்பத்தைப் பிரதிபலிக்கவும் அவர்கள் தமது முறையீட்டைப் பயன்படுத்ததவறவில்லை. இனப்படுகொலைகளும் பெண் அவதூறுகளும் தீவிர கண்டனங்களுக்குள்ளாக்கப்பட்டன.

கிருஷாந்திகளின்
மானமும் உடலும்
மீண்டும் மீண்டும்
மண்ணுள் போவதில்
செம்மணியகழ்வுகள்
தொடர்கதையாவதில்
மாற்றமெதுவும்
நிகழ்ந்திருக்குமோ

என்ற லறீனா ஹக்கின் கவிதை வரிகள் இதைத்தெளிவாக கூறுகிறது. யுத்தங்களில் பெண்களின் மானம் நிர்மூலம் செய்யப்படுவது பாரம்பரிய யுத்த அநீதி முறைகளில் ஒன்றாகும். பொஸ்னியாவிலும், சேர்பியாவிலும் இது மீண்டும் மீண்டும் முஸ்லிம் பெண்கள் மீது நிகழ்த்தப்பட்டது. இக்கொடிய செயலைப் பண்ணாமத்துக்கவிராயர் இக்பாலிடமே முறையீடாக முன்வைக்கிறார்.

பூவினும் மென்மையாய்
நீர் போற்றிய பெண்மை
சேர்பிய ஓநாய்களின்
கூட்டுக் காமப்பசிக்கு
இரையாகிக்
கடித்துக் குதறப்பட்ட
கருக்கூட்டல் முகாம்களில்
கசக்கப்பட்டு
மென்று துப்பப்பட்ட
சேதியறிந்தால்
எவ்வளவு வதைபட்டுத்
துடித்திருப்பீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தவெறியின் மோசமான நிகழ்வுகள் சமயப் புனிதங்களைக் கூட சவக்காடாய் ஆக்கிவிடுகின்றன. தர்மதுவீபத்தில் இந்த அத்துமீறல்களின் அளவு தர்மத்தையே தலைகுனிய வைக்கக்கூடியது.

1976ல் புத்தளம் பள்ளிவாசலுக்குள் பத்துப்பேரின் உயிர்களைத் துப்பாக்கி ரவைகள் பலிகொண்டது ஒரு சிறிய ஆரம்பம்மட்டுமே. 1990களில் கிழக்கின் பள்ளிவாசலில் நடந்தது ஒரு காவியம்பாடப் போதுமான அனர்த்தமாக விரிவுபெற்றது. பண்ணாமத்துக் கவிராயரின் முறையீடு இதை இவ்வாறு பதிவு செய்கிறது.

கிழக்கில்
துரோகமிழைக்கப்பட்ட தருணம்
குண்டுகள் துழைத்த
தொழுகையாளிகள்
தூயமேனியில்
தாரையாய் ஒழுகி
பள்ளித்தலங்களில்
பரவிய புனிதத்
தியாகக் குருதியின்
நினைவுத் துளிகளை....

பேரினவாத இனவாத அவலங்கள் பூமிபுத்திர வடிவத்தில் இலங்கையிலும் வேதத்தின் போர்வையில் அரிஜன அடக்கு முறையாக இந்தியாவிலும் ஸியோனிஸ வடிவத்தில் டெல்அவிவ்விலும் தொடர்வதையும் முறையீடுகள் தொட்டுக்காட்டத் தவறவில்லை.

தம்மை மட்டும்
பூமி புத்திரர் எனக்
கோடுகிழிக்க நினைக்கும்
பேரினவாத உள்ளங்களில்
இந்தியச் சேரிகளுக்குள்
ஐதிக அம்புகள் துளைத்த
அரிஜனக் கருவறையில்
முறையற்றுப் பிறந்த
டெல் அவிவ் தெருக்களில்
இன்னும் இனவாதம்
மிச்சமிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பாலை நோக்கிய கவிராஜனே! என்ற ஷம்ஸின் முழக்கம் அரங்கை மாத்திரம் அதிர்விக்கவில்லை. இந்திய உபகண்டத்தில் மீளத்தொனிக்கும் இக்பால் சிந்தனையின் அதிர்வலையை அது கூடார்த்தமாகப் பிரதிபலித்தது.

ஏனெனில் இக்பாலின் சுதந்திரவேட்கை கவிதைகளுக்குள் மட்டும் கட்டுண்டுகிடக்கவில்லை. சிறுபான்மை வேதனைக்கு இறுதிவிடிவாக பாகிஸ்தானை புவியியல் நிலப்பரப்பாய் பிரித்துக்கேட்ட முதலாமவர் அவர்தான்.

இக்பாலின் "ஷிக்வா" இலங்கைக் கவிஞர்களின் உணர்வுகளால் மீண்டும் புத்துயிர் பெற்றது. இக்பால் ஷிக்வாவை விட்ட இடத்திலிருந்து தோடர்வதுபோல் நம் கவிஞர்களும் தமது காலத்து சோகங்களையும் சாவால்களையும் அவலங்களையும் கவிதையில் குமுறலாய்ப் படைத்தனர்.

கவிதையில் குமுறலைச் சொல்வதாக அன்றி குமுறலே கவிதையாய் உருமாறி நிற்பதை இக்பாலின் "ஷிக்வாவை" ஆழ்ந்து கற்போர் உணர்வர். நம் கவிஞர்களின் எண்ண அலைகளும் கவிதைக் குமுறல்களாகவே சீறிப்பாய்கின்றன. இது ஒரு பரிசோதனைக் கவியரங்கு. இதன் வெற்றிக்கு காரணமாயிருந்தோர் இதில் பங்கேற்றுக் கவியரங்கை சிறப்பித்த கவிஞர் பெருமக்கள்தான். அவர்களுக்கு மீண்டும் எனது நன்றிகள்.

கவிஞர்கள் "முறையீடு" (ஷிக்வா) என்ற பொதுத் தலைப்பிலேயே கவிதைகள் படித்தனர். நூலின் அத்தியாய வசதிக்காக கவிதைக்கான தனித்தனித் தலைப்புக்களை நாம் வழங்கினோம்.

இந்நூல் வெளியீட்டிற்கு உதவிபுரிய முன்வந்த குமரன் அச்சகத்தாருக்கும், இதன் வெளியீட்டு முயற்சியில் முக்கிய பங்கேற்ற இக்பால்அலி அவர்களுக்கும் ஏனையோருக்கும் எனது நன்றிகள்.

***எம். எஸ். எம். அனஸ்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாமா இக்பாலின் முறையீடும் சமகாலச் சவால்களும்

*எம். எஸ். எம். அனஸ்*

இலங்கை தென்கிழக்கு ஆய்வமைய அல்லாமா இக்பால் தேசிய மாநாட்டு மதியுரைக்குழுவின் ஏற்பாட்டில் அல்லாமா இக்பால் தேசிய மாநாட்டு அறிமுக விழாவும் விசேட கவியரங்கமும் கண்டி ஓராபிபாஷா நிலைய மண்டபத்தில் நடைபெற்ற போது எம். எஸ். எம். அனஸ் அல்லாமா இக்பால் பற்றி ஆற்றிய உரையின் திருத்தப்பட்ட சுருக்கத்தொகுப்பு.

அல்லாமா இக்பால் அவர்களுடைய சிந்தனைகள் ஆசியாக் கண்டத்திற்கும் உலகத்திற்கும் பண்பாட்டு நெருக்கடிகளிலிருந்து விடுபட சில தீர்வுகளைத் தந்திருக்கின்றன. அந்தத் தீர்வுகள் என்ன அல்லது அந்தப் பிரச்சினைகளுக்கு அவர்கள் என்ன வழிமுறைகளைக் கண்டிருக்கிறார் என்பதைப் பற்றி சிந்திக்க நாங்கள் தவறியிருக்கின்றோம். ஏனையவர்கள் சிந்திப்பதற்கு முன் முஸ்லிமாகிய நாங்களே சிந்திக்கத் தவறியிருக்கின்றோம். ஒரு காலத்திற்குப் பின்னர் அவரது இலட்சியங்கள் இழுத்துச் செல்கின்ற சரியான நீரோட்டமொன்று இல்லாமல் போய்விட்டது. இது இந்தியாவிலும் சரிதான், பாகிஸ்தானிலும் சிரதான், இலங்கையிலும் சரிதான் பாரபட்சமற்ற பண்பாட்டு விழுமியங்கள் வளர்வதற்கு பெரும் தடைக்கல்லாக இருந்துள்ளது.

இக்பாலுடைய சிந்தனைகள் வளர்ச்சியடைய முடியாத நிலை ஏன் ஏற்பட்டது. ஏன் இக்பாலுடைய சிந்தனைகள் முன்னெடுத்துச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் போனது என்று முஸ்லிம் சிந்தனையாளர்கள் சிந்திக்க முன்வந்துள்ள இந்தக் காலகட்டத்தில் இலங்கையிலும் அது தொடர்பான சிந்தனைகள் பிரதிபலிக்க வேண்டும். என்ற ஆவலில்தான் இக்பால் மாநாட்டையும், இக்பால் சிந்தனைகளை மீள ஆராயும் நிகழ்ச்சிகளையும் ஆரம்பித்திருக்கின்றோம்.

அல்லாமா முஹம்மத் இக்பாலின் சிந்தனைகள் இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகண்டத்தில் மட்டுமன்றி ஆசியக்கண்டத்தில் பல கேந்திர நாடுகளில் இன்று மீள நினைவுகொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

நவீன யுகத்தின் சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்வதில் ஒரு முஸ்லிம் எதிர்கொள்ளவேண்டிய புதிய நிலைப்பாட்டினை அவர் இஸ்லாத்தின் கோட்பாடுகளிலிருந்து எடுத்துக்கூறினார்.

மரபு வாதங்களுக்குள் மங்கி மறைந்திருந்த புது உலகுக்கான செய்திகள் அவரின் பாடல்களில் பளிச்சிட்டன. முஸ்லிமை மட்டுமன்றி ஆசிய மனிதனின் வேட்கையையும் அவர் பாடல்கள் தூண்டின.

மேற்கத்தியர் கல்வி மரபு முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற்றுவந்த காலப்பிரிவில் சமயத்தின் பழமைவாதம் முஸ்லிமின் நவீன உலகப் பிரவேசத்தைத் தடுத்து நிறுத்திவிடுமோ என்ற அச்ச உணர்வு பரவியது. அல்லாமா இக்பால் இஸ்லாமியத்திலிருந்தே இதற்கு பதிலளித்தார். தற்கால நவீனத்துவத்தின் வாரிசாக இருக்கவேண்டியவன் நீயே என முஸ்லிமின் கடந்தகால விஞ்ஞான வரலாற்றை நினைவுபடுத்தினார்.

இக்பாலின் சிந்தனை புதிய உலக சவால்களையும் சிந்தனை மாற்றங்களையும் எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலை முஸ்லிமுக்கு வழங்கியது. கடந்த சில தசாப்தங்களாக அவரது சிந்தனைகள் மங்கிமறைந்துவிட்டது போல் காணப்பட்டாலும் அவற்றின் வேர்கள் நசுங்காமல் இருந்துள்ளன. உபகண்ட முஸ்லிம் ஆய்வறிவாளரும், சீன, மலேசிய ஆய்வறிவாளர்களும் மீண்டும் இக்பால் சிந்தனைகளைப் பரிசீலிக்க முன்வந்திருப்பது இதை நிரூபிக்கிறது.

ஈரான் தனது புரட்சிக்குப் பின்னணியான சிந்தனை வித்துக்கள் இக்பாலின் கவிதைகளில் இருப்பதாக இக்பாலைச் சொந்தங்கொண்டாட முயல்கிறது. எவ்வாறாயினும் ஆசியப்பிராந்தியத்தில் இஸ்லாமிய நாடுகளின் தோற்றம்பற்றி இக்பாலுக்கிருந்த முன்னறிவிப்புச்செய்யும் ஆற்றல் வியக்கக்கூடியது.

இக்பால் சமயக்கருத்துக்களை பூஜிக்கவில்லை. அவற்றை அவர் இயங்கும் தளத்திலிருந்து நோக்கினார். வரலாற்று மாற்றங்களுக் கிசைவாக அவை பரிணாமமுற வேண்டிய இலக்குகளை அவர் எடுத்துக்காட்டினார். சமயக்கருத்துக்களுக்கான எதிர்காலத்திற்குரிய வியாக்கியானங்கள் என்ன என்ற கேள்வி அவரது சமய சிந்தனைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியபாகமாகியது. அதனாலேயே இக்பால் இன்னும் எதிர் காலத்திற்கும் தேவையான நவீன யுகத்திற்குரிய மறுமலர்ச்சிச் சிந்தனையாளராக இருக்கின்றார்.

அல்லாமா இக்பால்விட்ட இடத்திலிருந்துதான் இஸ்லாமிய ஆராய்ச்சியைத் தொடங்கவேண்டும் என்று பேராசிரியர் கான்ட்வெல் ஸ்மித் நாற்பது வருடங்களுக்கு முன்னர் எழுதினார். அது இன்றும் பொருத்தமான கருத்துத்தான். 1994ல் வெளிவந்த 'இஸ்லாமிய விஞ்ஞான முறையியல்' (Research Methodology in Islamic Perspective) பற்றிய நூலில் முன்வைக்கப்பட்டுள்ள 'முஸ்லிம் உலகம் புதிய அறிவுப்பிரதேசத்திலும் விஞ்ஞானச் சிந்தனையிலும் பின்னடைவுபெறக் காரணமா யிருந்தவைகளில் ஒன்று இக்பாலின் சிந்தனைளை நாம் கவனத்திற்கொள்ளத் தவறியமைதான்' என்ற கூற்று கான்ட்வெல் ஸ்மித்தின் கருத்தை அங்கிகரிப்பதாகும்.

இன்றய கவியரங்கின் தலைப்பை முறையீடு(ஷிக்வா) என்று வைத்திருக்கின்றோம். "ஷிக்வா" என்று அவர் எழுதிய கவிதை நூலின் தலைப்பைத்தான் இந்தக் கவியரங்கிற்கு வைத்திருக்கின்றோம். 1909ல் லாகூர் அன்ஜுமன் ஹிமாயத்துல் இஸ்லாம் மாநாட்டில் முறையீடு என்ற தலைப்பிலே இக்பால் அந்தக் கவிதையைப் பாடினார் அப்போது அந்த சபையிலே இருந்த முஸ்லிம்கள் ஓரளவுக்கு அதிர்ச்சியடைந்தார்கள். அல்லாமா இக்பால் அவர்கள் இப்படியான ஒரு பாடலைப்பாடுவாரா என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அங்கே ஒரு உணர்ச்சி அலை அல்லாமா இக்பாலின் கவிதைகளுக்கு எதிராகப் பரவிக் கொண்டிருந்தது. இன்னொரு புறுத்தில் அவருடைய கவிதையை ரசித்து அதன் கவித்துவத்தையும் ஆழமான கருத்துக்களையும் ஆதரிக்கும் தன்மையும் காணப்பட்டது. கருத்து முரண்பாடுகள் கொண்ட நூலாக "முறையீடு" சிலரால் சொல்லப்பட்டது உண்மைதான். ஆனால் இக்பாலின் ஆளுமையும் சமுதாயநோக்கும் அந்தக்கருத்து முரண்பாடுகளை செயலற்றதாக்கிவிட்டன.

1900ம் ஆண்டு காலகட்டங்களில் உலகம் முழுவதும் காணப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான யுத்த சூழலை அல்லாமா இக்பால் மிகவும் கவலையோடு நோக்கினார். எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்ட இந்த மண்டபத்தில் (வீட்டில்) 20 வருடம் அஞ்ஞாதவாசம் செய்த எகிப்தின் கிளர்ச்சித்தலைவர் ஒறாபிபாஷாவையும் இக்பாலோடு தொடர்பு படுத்தாதிருக்க முடியாது. அந்த அடிப்படையில் தான் ஒறாபி பாஷா அவர்களையும் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1881ல் ஒறாபி பாஷா எகிப்திலிருந்து வெளியேற்றப்பட்டார். பிரித்தானிய ஏகாதியபத்தியத்திற்கெதிரான புரட்சிக்குத் தலைமை ஏற்றதால் ஒறாபி பாஷா நாடுகடத்தப்பட்டார். 1881ல் ஒறாபிபாஷாவின் புரட்சி எகிப்திலே வெடித்தது. 1871ல்-ஒரு சில வருட வித்தியாசங்களில் - அல்லாமா இக்பால் பிறக்கின்றார்கள்.

1871ல் இருந்து தாம்வாழ்ந்த காலப்பகுதி பூராவும் முழு உலகமும் முஸ்லிம்களுக்கு எதிரான போர்க்களமாகி அவர் இருப்பதைக்கண்டார். எகிப்திலே புரட்சி நடந்தது, இத்தாலியினுடைய தாக்குதல், லிபியாவில், சூடானில் புரட்சி, ஆபிரிக்கக் கண்டத்தில் ஐரோப்பியர்களுடைய ஆதிக்கம் இருந்தது. இதுமாத்திரமல்ல, இந்திய உப கண்டத்தில் முஸ்லிம்களுடைய எதிர்காலம் பற்றிய மிகவும் கவலைக்குரிய சூழலும் இனமோதல்களும் ஏற்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலேதான் "முறையீடு" என்ற கவிதையை அல்லாமா இக்பால் எழுதினார்.

இந்த முறையீட்டை அவர் எழுதும் போது அவரை மிகவும் நேரடியாகப் பாதித்தது "திரிப்போலியிலே" நடந்த ஒரு பெரும்போரில் முஸ்லிம்கள் அநியாயமாக ஆயிரக்கணாக்கில் ஒரே நேரத்தில் கொல்லப் பட்டமையாகும். அந்த சம்பவம் அவர் மனதை வெகுவாகத் தாக்கியது. இவற்றினால் ஏற்பட்ட உணர்ச்சிவேகமே ஆறு அடிகள் கொண்ட முப்பத்தைந்து கவிதைகள் அடங்கிய ஷிக்வாவாக உருவானது. ஒரு கூட்டத்திலே பாடும் அளவுக்கு யாத்த ஒரு சிறு தொகுப்புத்தான் பெரும் புரட்சியையே ஏற்படுத்தியது. இந்தநூல்தான் இக்பாலின் நூல்களிலே மிக அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட நூலாக உள்ளது. ஷிக்வா - மொழி பெயர்ப்பு கவிதைகளே தமிழிலும் அதிகம் வெளிவந்துள்ளன.

1956ம் ஆண்டு செய்யத் இப்றாகீம் அவர்கள் "முறையீடும் முறையீட்டிற்குப் பதிலும்" என்ற பெயரிலும், 1957ம் ஆண்டு உருது மொழியில் இருந்து ஈ. எஸ். பீர்முஹம்மத் தெ. பெ. பெருமாள் ஆகிய இரு கவிஞர்களும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். 1992ம் ஆண்டு யூசுப்ஹனிபா "அல்லாஹ்விடம் முறையீடும் பதிலும்" என்ற பெயரில் ஒரு அழகான மொழிபெயர்ப்பைத் தந்திருக்கின்றார்.

அதேவேளை எமது நாட்டிலும் 1974ம் ஆண்டு கலபூஷணம் ஏ. இக்பால் "ஷிக்வா" என்று பத்திரிகையை நடத்தி சில குறிப்பிட்ட கவிதைகளை மொழி பெயர்த்திருக்கன்றார். எம். ஏ. நுஹ்மான் ஷிக்வாவின் பல கவிதைகளை மொழி பெயர்த்துள்ளார்(அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்படவில்லை) ஓறாபி பாஷா நிலையப் பணிப்பாளர் எஸ். எம். ஏ. ஹஸன் மிக முக்கியமான கவிதைப்பகுதிகளை மொழிபெயர்த்து வருகின்றார்.

இக்பாலின் முறையீட்டை இலங்கையர்களும், இந்தியர்களும், ஒரு கண்ணோக்கிலேயே பார்த்தார்கள். அதாவது தூங்கிக் கிடக்கின்ற முஸ்லிம் உலகத்தை தட்டியெழுப்புகின்ற ஒரு சாதனமாக அதை அவர்கள் கணித்தனர்.

நவீன முஸ்லிம்களின் துயரத்தையும், பலவீனங்களையும், வீழ்ச்சிகளையும் 'ஷிக்வா'விலும் ஜவாபே ஷிக்வாவிலும் இக்பால் கவிதையாக வடித்தார். துயரமும் தீவிரமும் நிறைந்த இக்பாலின் கவிதைவரிகள் படிப்போர் உள்ளங்களை மின்னலாய்த்தாக்கி அவர் எழுப்பிய கேள்விகளுக்கு முஸ்லிம் சமூகம் பதிலளிக்க கடமைப்பட்டிருந்தது.

இக்பால் கேள்விகளை சூனியத்திடம் கேட்கவில்லை. இறைவனை நோக்கி இக்பால் தமது கேள்விகளை முறையீடாய் முன்வைத்தார் அது அவரது கவிதைப் பரிசோதனையாகும். பலரை அதிரச்செய்த பரிசோதனையாயும் அது அமைந்தது.

ஷிக்வாவில் அன்று இக்பால்பாடிய விடயங்கள் இன்றும் முஸ்லிம் சமூகத்திற்குப் பொருத்தமாகவே உள்ளது. 19ம் நூற்றாண்டில் புகழ்பெற்ற உருதுக்கவி ஹாலியின் "முஸாதாஸ்" என்ற கவிதைப்படைப்பின் உட்தூண்டலே இக்பாலின் ஷிக்வாவிற்கு ஆதாரமாக இருந்தது. கவி ஹாலியின் படைப்பு முஸ்லிம்களின் துயரப் புலம்பலாகவும் செயற்படுவதற்கான ஒரு பத்திரமாவும் இருந்தது. இப்பழைய கவிதை வடிவத்தைத் தீவிரமும் புதிய செய்திகளும் உணர்ச்சிவேகமும் கொண்டதாக இக்பால் மாற்றினார்.

மனிதனின் முறையீட்டை இக்பால் இறைவனின் சன்னிதானம்வரை கொண்டுசென்றார். அசாத்தியமான கற்பனையை இக்பால் முறையீட்டால் நிறைவேற்றினார். உணர்ச்சியும் தீவிரமும் கொண்ட கடினபதங்களை இக்பால் கையாண்டார். சிலர் அவை பற்றி அதிருப்தியை வெளியிட்டனர். எனினும் இக்பாலின் தூய இலட்சிய நோக்கும் யதார்த்தமான சமூதாய உணர்வும் அவர்களின் குறுகிய நோக்குகள் வெற்றியடைவதைத்தடுத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய சமய அறிவுப்பரப்பில் கூர்மையான முரண்பாடுள்ள கருத்துக்களையும் பொறுமையுடன் ஏற்கின்ற தாராள அறிவு மனப்பாண்மை உயிர்வாழ்கின்றதென்பதற்கு 'ஷிக்வாவின்' வெற்றி ஒரு அடையாளமாகியது.

'அஸ்ராரே குத்கி' (இதயத்தின் இரகசியம்) என்னும் மற்றொரு நூல் இக்பாலின் முக்கியமான இலக்கியப்படைப்பாகக் கருதப்படுகிறது. இது ரவீந்திரநாத் தாகூருடைய கவிதாஞ்சலிக்குச் சமமான படைப்பாகத் திகழ்கின்றது. தாகூரின் நூல் நோபல் பரிசைப்பெற்றது. 'அஸ்ராரே குத்கி'யிற்கு அப்பரிசு கிடைக்கவில்லை. கவிதாஞ்சலிக்கு நிகரான பூரணமான இலக்கியப்படைப்பாக இருந்தும் அதற்குப்பரிசு கிடைக்கமால் போனதற்கு அதன் மொழிபெயர்ப்பு வெற்றியளிக்காததே காரணம் என்று கூறப்படுகின்றது.

இக்பால் தத்துவக்கவி, தத்துவத்தில் இக்பாலுக்கு முறையான பயிற்சியிலிருந்தது. மனிதனை மையப்படுத்தி வளர்ச்சிபெற்றுவந்த மெய்யியல்களால் இக்பால் கவரப்பட்டிருந்தார். மனிதன் இக்பாலின் சிந்தனையில் மையப்பொருளாவான். இறைவனாயினும் இக்பாலின் 'முறையீட்டில்' மனிதனின் கேள்விகளுக்குப் பதில் தரவேண்டியிருந்தது.

மனிதனையும் அவனது செயலாற்றலையும் படைப்பாற்றலையும் இக்பாலின் கவிதைகள் எல்லையற்ற அற்புதமாக்கின. உலகை நிர்மாணத்தில் மற்றொரு பகுதியை மனிதர் ஆட்சி செய்வதாக இக்பால் மனிதனை நிர்மாணத்திறனுள்ளவனாக மேம்படுத்தினார்.

இப்போது நாங்கள் இருக்கும் இந்த மண்டபத்தைப்பாருங்கள், ஒளி, அலங்காரம், ஆடைஅணிகள் அனைத்தையும் பாருங்கள்; இவை மனிதனின் ஆக்கத்தின் விளைவுகள்; உண்மையில் நாம் இரண்டாவது இயற்கையில் இருக்கின்றோம். இதை இக்பால் மனிதனின் சக்தியாக மனிதனுக்கு விளக்கினார். அது மிகவும் துணிச்சலான செய்தி மட்டுமல்ல மனிதனை மலிவாகவும் ஆற்றல் அற்ற தூசுகளாகவும் கருதுவோர்க்கு அவர் பாடம்படிப்பித்தார். இறைவா நீ படைப்பாளன் ஆயினும் நானும் அவற்றிலிருந்து எனக்கான உலகைப படைத்திருக்கிறேன் என்று அந்தப்பாடல் வரிகள் கூறுகின்றன. தனக்குரிய உலகை மண்ணில் உருவாக்குவதில் மனிதனுக்குள்ளே இடையுறாத ஆற்றலை இக்பால் கௌரவப்படுத்தினார்.

நீ இரவைப்படைத்தாய்
நான் விளக்கைச்சமைத்தேன்
நீ மண்ணைப்படைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பாத்திரங்களை ஆக்கினேன்
நீ மலையை, மரத்தைக், ..... கடலைக்
காட்டைப் படைத்தாய்
தோப்பையும், நந்தவனத்தையும் பூஞ்சோலையையும்
நான் ஆக்கினேன்
நீ கல்லைப்படைத்தாய்
நான் கண்ணாடி செய்தேன்
நீ விஷத்தை ஆக்கினாய்
நான் அதை மருந்தாய் மாற்றினேன்

மனிதன் சாதாரணமானவனாயினும் மனிதனில் பொதிந்துகிடந்த ஆற்றலை இக்பால் வெளிபடுத்தினார். மனிதனை வியக்கவும் அவனது ஆற்றல்களை உலகுக்குச்சொல்லவும் சக்திபெற்றிருந்த மிகச் சிலருள் இக்பாலும் ஒருவர்.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் இக்பால் பேசினாலும் அவரது கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்திற்காக மட்டும் இருக்கவில்லை. அவரது செய்திகள் உலகமாந்தர் அனைவருக்கும் பொதுவானவை. எனக்கு இருக்கின்ற ஊடகம் முஸ்லிம்கள்தான் ஆகவே எனது செய்தியை முஸ்லிம்கள் ஊடாக உலகுக்குச் சொல்கிறேன் என்று அவர் வெளிப்படையாகக் குறிப்பிட்டார்.

இக்பாலின் தத்துவங்கள் சாதாரண பார்வைக்கு எளிதில் புலப்படாதவை இக்பால் சமய சீர்திருத்தவாதியும் சிந்தனையாளருமாவார். அவரது சிந்தனை தத்துவ நோக்கையும் தாராள வாதத்தையும் கொண்டிருந்தது. அதனால் குறுகிய எல்லைகளைக் கடந்து சிந்திக்கும் ஆற்றல் அவருக்கிருந்தது.

நன்றி: **ஞாயிறு வீரகேசரி ஆசிரியர் வீ தேவராஜ்**
*(இலக்கியச் சாரல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம். எச். எம். ஷம்ஸ்*

# மனம் திறந்த முறையீடு

இமயத்தின் உச்சியிலே
கருக்கொண்டு, அடிதழுவி
அரபுக் கடல் தன்னை
ஆரத் தழுவுகின்ற
சிந்துமா நதியிரைச்சல்
இன்னும் ஓயவில்லை

கவிராஜன் இக்பாலின்
கானாமிர்தங்கள்
இன்றும் கேட்கிறது
சிந்துவின் இரைச்சலிலே

ஓ........ கவிராஜ திலகமே
இமயத்தின் அடிவாரம்
நீ இருந்து எழுப்பிய
ஷிக்வாவும் ஜவாபும்
பாரத மாதாவின்
கழுத்துப் பவளமாம்
இலங்கா புரிக்கும்
எட்டியது. கல்புகளைத்
தட்டியது

ஓ ........ கவிராஜ திலகமே
மனுக்குலத்தின் மூச்சு
பூ வெளியில் எறியும் வரை
ஷிக்வாக்கள் தொடருமா?
முறையீடு தொடருமா?
ஹிஜாஸ் நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபோடும்
கரவான் கூட்டத்தின்
இறுதியில் நானொருவன்
முன்னோக்கி விழிபதித்து
உன் கம்பீரத் தோற்றமும்
தெரிந்தது - நாமிங்கே
சிற்றெறும்பாகத்
துயர்கின்றோம்

கரவான் கூட்டத்தின்
முறையீட்டு ஓலங்கள்
நூற்றாண்டு தோறும்
எழுந்துளது - தொடர்ந்துளது
அந்தப் பாரம்பரியத்தின்
என்னிந்த முறையீடுயூ

ஓ ........ கவிராஜ திலகமே
இஸ்லாத்தின் அருவியிலே
நீராடி
கீழைத் தென்றலில்
விளையாடி
மேலைப் பூங்காவில்
நடமாடி
மனிதனைத் தேடும்
மாபெரிய வேள்வியிலே
தத்துவ விசாரம்
நடத்தினாய்

நானும்
நீ சொன்ன அதிமனிதன்
நிழல் தேடி அலைந்திட்டேன்
இன்னுமே காணவில்லை
இன்று .........?

வேத ஒளி விளக்கின்
அடி தழுவிக் கிடந்ததனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டே கதியென்று
உழன்று கிடக்கிறார்
ஒளி விளக்கை ஏந்தி
அறிவு வழி செல்லாது
விளக்கின் எண்ணெய்யிலே
விட்டில்களாய் வீழ்கின்றார்.
ஹிஜாஸெனும் பட்டறையில்
பரீட்சித்து வெற்றிகண்ட
ஔஷதப் பட்டியலை
வாயிட்டுச் சுவைத்து
ஆஹா இதுவன்றோ
அமுதம் எனக்கூறி
மாயப் பிராந்தியில்
மயங்கிக் கிடக்கின்றார்.

தேக சுகம் கண்ட
தெம்பு எனக் கூறி
ஜூப்பா தலைப்பா
தஸ்பிஹ் எனச் சூடி
கற்பனை வெளியில்
கால்பதித்து நடக்கிறார்

வயிற்றுக்கு வழியின்றி
அறிவுத் தரித்திரத்தில்
சம்சார சாகரத்தில்
துடுப்பிலாப் படகாக
துவள்கின்ற பக்தர்கள்
சுவனத்து ஹவூர்களை
சுந்துஸ் இஸ்தபாக்கை
கண்டுவிட்ட களிப்பில்
கனவுலகில் மிதக்கின்றார்.

ஓ ........ கவிராஜ திலகமே
சமூகப் பிணி தீர்த்த
சர்வலோக நிவாரணியை
கைகளிலே ஏந்தி நின்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறதே நோய் முனகல்!
மருத்துவரே நோய் முற்றி
மாய்ந்து கிடக்கையில்
தவறேதோ நடந்துளது
தேடுகிறோம் கவியரசே.

சமாதானத் தென்றல்
தவழ்ந்த பள்ளிகளில்
கர்பலா களத்தின்
கத்தியோலி கேட்கிறதே!
வெண்புறா சிறகோடு
வெளியேறும் பக்தர்களின்
கால்நுனியின் கூர்நகங்கள்
காபிர்களைக் கிழிக்கிறதே!

வெண்சலவைக் கல்மீது
முகம்பதித்த போதும் - அவர்
வெள்ளை மனசுகளாய்
வெளியேறக் காணலையே!

ஓ ........ கவிராஜ திலகமே
அரசியல் அரங்கமோ
அவிந்து நாறுகிறது
எழுபதுகள் ..... எண்பதுகள்
சிவப்பு மைபூசி
சிம்மக் கொடி தூக்கி
வரலாற்றில் இரத்தக்
கறைபூசிச் சென்ற
நினைவுப் பதிவுகள்
நெஞ்சை நெருடினாலும்
தர்மச் சக்கரத்தின்
பெயர்ப்பகை தூக்கவில்லை
அதனால் -
பௌத்தம் பிழைத்தது!
எண்பதுகளில் தொட்டு
யாழின் தந்திகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபசுரம் எழுப்புகின்ற
பரணி இசையிற்கூட
ஓம் சத்தம் கேட்கவில்லை
அதனால் -
சைவம் பிழைத்தது!

ராஜ்ய லாபத்துக்காய்
வாள் தூக்கும் முஸல் மானோ
குர்ஆனின் உறைக்குள்ளே
வாளைச் சொருகுகின்றான்
துப்பாக்கிக் குழாய் தன்னை
தூக்கி வாய் பொருத்தி
பாங்கொலி எழுப்புகின்றான்
அரசியற் சண்டைக்கும்
அல்லாஹ்வை ரஸூலை
சுயலாபம் சேர்க்க
ஏந்துகிறான் கேடயமாய்

இதனால் -
சாந்தியின் வேதம்
சண்டையின் சின்னமாச்சு
பண்பாட்டின் மார்க்கம்
பயங்கரவாத மாச்சு
அதிகார பீடத்தில்
அடிகள் பதிப்பதற்கும்
இஸ்லாத்தைப் படியாக்கி
இரு காலால் மிதிக்கிறான்
அரசியல், வன்முறைக்கும்
வர்த்தகச் சூதுக்கும்
இஸ்லாம் -
பதாகையாகிவிட்ட
பரிதாபம், பார் கவியேயூ
அறிவியலும் ஆகமமும்
ஆப்த நண்பர்களாம்
(சொல்கின்றார் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறென்றால் -
சீரழிவுச் சமுதாய
சக்திகளைச் சீர்பார்க்க
அறிவியலாம் துலாக்கோலின்
அனுசரணை நாடினால்
வெறி கொண்டு பத்வா
வெடிகுண்டெறிகின்றார்
ஏனிந்த முரண்பாடு?
பௌதீக விஞ்ஞானத்தை
போற்றி எழுமிவர்
அரசியல் விஞ்ஞானிக்கோ
இடமில்லை என்கின்றார்
இது ஏன் ?

அறிவியலும், தீட்சண்ய
ஆய்வும் எழுந்திட்டால்
உடமைச் சமுதாய
போலி முலாம் யாவும்
உருக்காட்டும்
அது மட்டா?
சமூக நீதிக்கு
சாவு மணியடித்த
சங்கதியும் புரியும்
இன்று நடப்பதென்ன?

முதலாண்மைச் சமூக
முரட்டுத் தரையினிலே
மோகன இஸ்லாத்தை
மலர்விக்க முயல்கின்ற
கனவுச் சித்தர்கள்
கோட்பாட்டுத் திரை தூக்கி
இளம்பிறைக் கொடி
ஏதேதோ உளறுகின்றார்
சமுதாயத் தளமிங்கு
சரிந்து கிடக்கையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவத் துவக்கத்தை
தூக்கி நிறுத்திவிட
துடியாய்த் துடிக்கின்றார்.

சீருற்ற இஸ்லாம் - இன்று
சிறைபட்டுக் கிடக்கிறது
அதனால் தான் -
கால்மாக்ஸைச் சென்னால்
கடுப்பு முகம் வெடிக்கும்
சமதர்மம் எனச் சொன்னால்
சண்டைக்குத் திரள்கின்றார்
இப்படி-
அறிவியலைத் துறந்து - போலி
ஆன்மிகம் தழுவி நின்ற
சோம்பல் சமுதாயத்தில்
சுழன்றடிக்கும் புயலானாய்
கவிப் புயலானாய்
கால்மாக்ஸை லெனினை
கூட்டி வந்து அல்லாஹ்வின்
சன்னிதியில் அவர் புகழை
போற்றி நின்றாய் கவியரசே!

கட்டில்லாச் சந்தை
கற்கண்டாம் இவர்களுக்கு
மக்கத்து மாதவமும்
மாண்புற்ற கஃபாவும்
சந்தைப் பொருளாச்சு
ஹஜ்ஜு யாத்திரையும்
சுரண்டல் தொழிலாச்சு

வழிபடும் வந்தனையும்
வர்த்தகமாய் மாறுகையில்
கல்வியும் கலையும்
கலாச்சாரமும் இலக்கியமும்
காற்றில் துரும்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பதிலே வியப்புண்டா?
மார்க்க விழுமியங்கள்
மானுட நேயம்
நல்லுறவும் நற்பண்பும்
இல்லாத சக்கைக்கு
என்னதான் உயர்நாமம்
இட்டாலும் மதித்தாலும்
ஏக்கங்கள் தீர்க்குமா?
கவிராஜ திலகமே

மனம் கசிந்து கொட்டும்
முறையீட்டை மனம்திறந்து
சமர்ப்பித்தேன் கவியரசே
ஷிக்வாவை முறையிட்ட நீ
ஜவாபாக பதிலும் தந்தாயே
நானோ-
ஷிக்வாவை முன்வைத்தேன்
ஜவாபுரைக்க
திராணியின்றி
விடைபெற்றேன்.

⁂ ⁂ ⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கலாபூஷணம் ஏ. இக்பால்*

# உண்மையின் முறையீடு

வல்லவனாம் அல்லாஹ்வின்
வான்புகழும் நாமமதைச்
சொல்லி ......

அன்பு நிறை கொண்ட சனம்
அறிவுமிகை கொண்ட பலம்
வென்று நிற்கும் நண்பர் குலம்
வினைபுகழும் மேன்மைக் குணம்
இங்கிருப்போர் யாவர் நலம்
இனிதுயர்த்தி ........
அன்பர்கள், நண்பர்கள்,
அறிஞர்காள் போற்றி
தகைசெறிந்த தலைமைக்குப்
பணிந்து ......

தேனாகச் சிந்தனைகள்
திகழ்கின்ற கருங்கொடியூர்
தானாக ஈன்ற தகையவர்கள்
ஊனாக
அலியார் மரிக்கார் எனும் கலைஞன் சந்ததியின்
வழியாக வந்தவனே யான்
தெளிவாகக்
கருக்கிப் புடம் போட்டுக்
கலப்பில்லாத உண்மையதாய்
நெருக்கி இறுக்கமென
நினைவினுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லை வறுத்துச்
சுட்டழுத்தும் பாப்புனையும்
வல்லமையே எனக்கு வா!
வல்லமையே அல்லாஹ் தா!

ஈழத்தின் கிழக்கினிலே வங்கக் குடா
ஈன்றிருக்கும் சிறப்புமிகு கருங்கொடியூர்
சீலத்தால் சிந்தனையால் அருகிலுள்ள
சிற்றூர்கள் பத்தினையே சேர்த்தாலே
ஆழமெனக் கலை பலவும் அறிந்திருக்கும்
அக்கரைப்பற்றூர் எனது தாயகமே
காலத்தின் மாற்றத்தால் புக்ககமாய்க்
கண்ணியமாம் தர்கா நகரிலுள்ளேன்!

பத்து நிமிடத்துள் ஒரு பாராயணம்
படித்து முடித்திட இயலாது
அத்துமீறி யிவ்வவையின் போக்கினை
அசைத்துக் குளப்பவும் முடியாது
இத்தனைபெரு தலைப்பை ஈந்ததால்
எதனைப் பாடுவேன் இசை யாது?
இசையாது,
மெத்தப் படித்தவர் மத்தியிலே நின்று
மெட்டெடுத்திடும் விளையாட்டு - இது
மெருகூட்டிடும் புதுப் பாட்டு,

இப்பொழுது நான் எழுதிக் குவித்தவை
எழுத்தை எழுதிய எழுது கோல்
எப்பொழுதுமே பெருமை யுடையவை
இறைவன் சத்தியப் பொருட்களாய்
அப்பொழுது நம்நபிக்கருளிய
அற்புதக் குர்ஆனை நூன் அதில்
செப்பிவிட்டதால் செகமதி லவை
சீர் பெறும் பெரும் பொக்கிஷம் - நாம்
சீர்மை யுடையவர் நிச்சயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுது கோல் எழுதியவை மீதிறைவன்
இணங்கிய சத்தியம் செய்கிறான் அல்குர்ஆன் 68: 1
எழுது கோல் எழுதியவை ஏந்திய நாங்களே
இகமெலாம் அகமெலாம் உயர்ந்தவர் ! ஆதலால்
சீர்மையுடையவர் நிச்சயம் !

முறையீடென்பது "கொம்லைன்" (Complain)
முறைமை கெடுவதால் நிகழ்வது
குறைதீர்க்குமிக் கோரிக்கை
குதிர்த் தெழுந்திடும் "அப்பீல" (Appeal) முறை!
முறையீட்டை எவர்முன்னிலையில்
முயன்று நின்று நாம் கேட்பது?
முறையீடிர் கெவர் முன்னிலை?
முயன்று நின்று நாம் கேட்பது?
இறைவனிடத்திலே முறையிட
எமக்குரிமை சிறிதுமே யில்லையே!

முறைமை எனும் மனித உரிமைகள்
முறையாய் வகுத்ததே இறைமறை
நிறைவாய் நபியினுக் கருளிய
நிகழ்ச்சிதான் தூது அது சரித்திரம்
இறைவனருளிய முறைமை தவறிய
இறையருள் கெட்ட மனிதர்கள்
இறைவனிடத்தில் முறையீடு செய்வது
இணக்கமற்றது இதை விடு - இதில்
இணங்கி நடந்திட வழிவிடு
இணங்கி நடந்திட வாதிடு !

சட்டஞானத்தின் புனர் நிர்மாணத்தை
சார்ந்திஸ்லாத்திட னிணைத்துமே
மெத்தப் பெரிய நூலொன் றெழுதிடும்
முனைப்பில் அல்லாமா இருந்தவர்
அட்டதிக்கெலாம் அவர் அளித்த நல்
ஆக்கம் கவிதையில் எழுந்ததால்
எட்டு மட்டும் இவ்வுலகம் இறைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் மறையினை உணர்ந்து - அதில்
ஆழ்ந்த ஞானமும் பெற்றது.
கற்றறிந்தவர் கண்ணியமுடன்
காலக் கணக்குகள் யாத்தனர்
பற்று மிக்கவர் பகுத்தறிந்தவர்
பாரில் உயர்வுமே பெற்றனர்
குற்றமுள்ளவர் குணங்கள் கெட்டவர்
குர்ஆன் ஓதித் திருந்தினர்
அற்புதம் அம்மறை நமக்கருள்
ஆழ்ந் துணர்த்திய தெங்ஙனம்? -இதில்
அறிவு செலுத்துதல் நம்குணம்!

இப்பொழுது நாம் இறைமறையினை
எமக்கருளிய தாகவே
துப்பரவுடன் தொடர்ந்து ஓதினால்
தூயவனுடன் சம்பா ஷணை
எப்பொழுதும் இங்கு செய்வதாய்
ஏற்ற மனதுட னாழ்வதால்
செப்பமுள்ள நல் வாழ்க்கை யமைத்திடும்
சேர்ந்து புத்தியைக் கூர் செய்வீர் - இது
நேர்ந்து விட்டால் முறை யாகிடும்

என்னாலியலும் என்னாற்றா னியலும்
இந்த நடைமுறைச் சிக்கலும்
என்கூவலால் கிழக்கு வெளுக்குமே
என்று எண்ணும் சேவலும்
புண்ணாக்கிய கலை கலாச்சாரம்
புனுகு பூசிய காயங்கள்
இன்னும் நாற்றம் எழுந்து அழிவதை
இனியும் ஏற்றிடல் ஆகுமா? - கலை
அறிவு இவற்றினை ஏற்குமா?

அல்லமா இக்பால் அருளிய முறையீடு
அல்லாஹ்வின் ஆணையைப் பெற்றவர்
வெல்ல நடந்து வெற்றி கொண்டதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து கூறிய முறை யது!
எல்லாம் முறையற்று நடந்து வீழ்ந்ததால்
எழுந்து நிற்கவே இடரும் நாம்
உள்ளம் வெளுத்திட உறைக்கும் வித்ததினில்
உடனே மனிதர் முன் சமர்ப்பணம் - இது
உயர்ந்த முறையீடு செயற்பாடு !

விஞ்ஞான மின்று விழி பிதுங்குதல்
வழி தெரியாத திணறலாம்
அஞ்ஞானப் போக்கினால் அழிவு வந்தது
ஆழ்ந்து சிந்தித்த லவசியம்யூ
மெய்ஞ்ஞானம் வழி தெரிவித் துணர்த்துதல்
மேன்மை வாழ்க்கைக் குதவுமாம்
நம்ஞானம் நலிந்து நாசமாவதை
நாமுணரும் இந்நேர மாம் - இதில்
நியதி பேணுதல் அவசியம்!

இருக்கும் போதே இறந்து விட்டவர்
இறந்த பின்னும் இருந்திடாதவர்
நெருங்கிச் செய்தவை நிலை குலைந்தவை
நிகழ்ந்த காரியம் நிறுத்துப் பார்த்திட
இருக்கு மறிஞர்கள் எழுந்துலகினில்
இடர் ஒதுக்கிட வாருங்கள்!
அறிவு பெற்றவர் அளந்து பார்ப்பதால்
இறந்த பின்னும் இருப்பவர் - அவர்
என்றும் உலகில் நிலைப்பவர் !

சிறந்த வேடன் வேட்டை யாடிடச்
சிறிதும் ஆயுதம் ஏந்திடான்
மறைந்து நின்று பெண் மானைக் கண்டதும்
மளமளென் றாண்மான் குர லெழுப்புவான்
குரலில் மயங்கும் குண முடையவர்
கூட்டம் கண்டவர் பாட்டைப் பாடுதல்
நிறைவுடையதா? நேர்மையானதா?
நிகழ்த்தி விட்ட குறைகள் தீர்க்குமா? - மிக
நீளமாகவே நினைத்துப் பாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் நாமம் ஒடுங்கி வீழ்ந்தது
முறைதவறிய அரசுகள் நடந்தன
இஸ்லாமற்றதாய் இறைமை பொய்த்ததாய்
உலக மெங்கிலும் இடர்த லானதால்
அசலாம் மூல ஆதாரமெனு மிரு
அல்லாஹ் ரஸவூலையே தள்ளியே வைத்தனர்
பிசகாய் மனிதன் தனது கருத்தையே
பேணிப் பிறழ்ந்து நடக்கும் இவ்வேளையில் - அசலைப்
பேணிட வாரீர் பெருமக்களே!

தொல் பொருள் திணைக்களம் தேடும் புதையல்கள்
பல்பொருள் வடிவினில் பார்த்துத் தோண்டலாம்
பல்விதச் சுவடுகள் பற்பலகைகளில்
எடுத்துச் சுவடிக் கூடம் சேர்க்கலாம்
கல்வியின் அடிப்படை கண்டவர் யாவரும்
கணக்கிட் டிவைகளைக் காட்டிட வேண்டுமாம்!
இல்லையென் றெவரும் ஒதுங்கிடா வந்து
உடனடி இயங்குதல் ஏற்றமே - இதுவே
உங்கள் முன் நான் வைக்கும் முறையீடு!

பத்து நிமிடத்துள் ஒரு பாராயணம்
படித்து முடித்திட இயலாது
அத்து மீறிக் காலம் அளப்பதால்
அறிவு சார்ந்தவர் பொறுத்திடார்
இத்துடன் என் முறையீட்டினை
இந்த அவையினில் சமர்ப்பித்தேன்
உத்தமர் இக்பால் தேசிய மகாநாட்டின்
உறுப்பினர் யாவர்க்கும் நன்றியே - குற்றம்
பொறுத்திடக் கூறி முடிக்கின்றேன்.
பணிவு.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாமத்துக் கவிராயர்

# குருதிக்குள் பூத்த பாவலனே

இலங்கை தென் கிழக்கு
ஆய்வு மைய ஏற்பாட்டில்
அல்லமா இக்பால்
தேசிய மகா நாட்டின்
முன்னீடாய் இன்று - கண்டி
ஓராபி பாஷா நிலையத்தில் -
நூண்மான் நுழைபுலம்
மிக்க நல்லறிஞன்
கலாநிதி - துரை
மனோகரன் - தலைமையில்

முஷாயிராவில் கவிதைகளை
முறையீடாய்ச் சமர்ப்பிக்க
இங்குற்ற கவிஞர்கள்
சான்றோர்கள், சஹிருதயர்கள்
முன்னிலையில் - பண்ணாமத்துக்
கவிராயன் சபையுற்றேன் -

நாவின் முடிச்சவிழ்த்து
நான் பாட அருளுகின்ற
நாயன் எனக்குத் துணை.
கேள்விகளும்
முறையீடுமாய் -
பிரக்ஞை வெளியில்
கவிச் சிறகு விரித்த
பிரபஞ்சப் பறவையே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு முனையும் கூர்மையான
இளம் பிறையே எம் சின்னம்
அசத்தியத்தால் அடக்கப்படக் கூடியோர்
நாங்க ளல்லோம் ....?

என...
இஸ்லாமிய மில்லத்தின்
எழுச்சிக்காய் சமூக கீதம்
இசைத்த
ஸஹீன் பட்சியே,

வளர் பிறையே சின்னமாய்
வரித்த வொரு சமூகம்
தளர்வுக்கும், அடிமைத்
தனத்துக்கும் வழிவிட்டு

சின்னா பின்ன முற்று
சீர்கேடுகள் மலிந்து
தேக்கமும் பின்னடைவும்
பிணியாய் வருத்த
தூக்கத்தில் ஆழ்ந்த
நிலை கண்டு துடித்து
ஊக்குகின்ற தவ்ஹீதால்
மீண்டும் உயிர்ப்புற
உம்மத்தின் உயிர்நாளங்களில்
உதிரத்தில் கலந்த நெருப்பாய்
ஜீவவோட்டம் பாய்ச்சிய
ஜிந்தா ரூத்,

மண்ணில் இறைவனின்
பிரதி நிதி மனிதன் - என்ற
மறைகருத்தை மறந்த
இன்ஸானின் துயில் கலைய
தட்டி யெழுப்புதற்காய்
தரானா முழக்கிய
கவிமுரசே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணக் கூட்டத்தின்
புறப்பாடு அறிவிக்கும்
பாலைவன மணியோசையாய் -

ஸமீரியின் பிரமைகளை
உடைத்து நொறுக்கும்
மூசாவின் கைத்தடியாய்-

இருள் கிழித்து
ஒளி பரப்பும்
ஜிப்ரீலின் இறக்கையாய் -

ஏகத்துவ
சுகந்தம் சுமந்து
ஹிஜாஸின் தென்றலாய் -

மதகுருவால்
ஏமாற்றப்படாமல்
நவீன நாகரீகப்
பகட்டில் மயங்காமல்

நித்தியத்துவ யாத்திரையினுடாக
தேடலைத் தொடர்ந்து
தெய்வ வெறி கொண்ட
ஃபக்கீரே -

பூமியை விட்டு - நீர்
புறப்படத் தயாராய் - உம்
பயணப் பொதியைக்
கட்டுகையில் - எல்லோரும்

ஆஹா .... இவரை
அறிவோம் .. அறிவோம் .. .. என்று
கொண்டாடிக் குதுகலித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதித்தனரே அல்லாமல்
எங்கிருந் துற்றீர்
என் சொல் எவர்க்கு உரைத்தீர்
என்று

உம்மை அறிந்தார்
எவரும் இலர் என்ற
ஆதங்கத்தோடு
எமைவிட்டு அகன்றவரே,

மரணத்துக்கு இடம் கொடுக்கும்
சமூகம் - தன் கவிஞனை
வாழ்க்கையை விட்டுப்
புறம் போக விடும் சமூகம்
கைசேதப் படும் எனக்
கடுமையாய்ச் சொன்னவரே,

மவ்த்தைக் கூடப்
பிரக்ஞையுடன் எதிர்கொள்ள
வேட்கையுற்று - சக்கறாத்தின்
வேதனைகளைச் சகித்து
மோ பீன் மருந்தூசி
வேண்டாமென மறுத்தவர் நீர்

வானத்தின் கீழ்
வாழ்ந்திருந்த நாட்களில்
வாழ்க்கை முட்களில்
வதைபட்ட இதயத்தின்
ரணம் வடித்த கேள்விகளை
ரட்சகனிடம் கேட்க

நாஸ்தீக வெனினையே
நாயன் முன்னிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நிறுத்தி
மனித மனசாட்சியின்
குரலாக ஒலித்தவர் நீர்.

இந்த நூற்றாண்டு
முழுவதும் எதிரொலித்து
இன்றும் - பு'மியை
பு'கம்பமாய் உலுக்கும்
கேள்விகளை லெனின் மூலம்
அல்லாஹ்விடம் கேட்ட
அல்லமா நீர்.

வெள்ளையனே கீழ் நாடு
காண்கின்ற கடவுளாய்
மின்னும் உலோகங்கள்
மேற்கே கடவுளாய்
வங்கி, மஸ்ஜிதை
விடவும் உயர்ந்து நிற்க,
தங்கத்தின், டாலரின்
தர்பார் கடைவிரிக்க,

இயந்திரத்தின் ஆதிக்கம்
இருதயத்தின் மரணமாய் ......

ராட்ச உருளைகளில்
மனிதம் அரைபட்டு
நசிவது கண்டு
கனற் பொறியாய்க்
கதித்த நெஞ்சக்
குமுறலை வெளியிட்டீர் - உம்
றப்பிடம் முறையீடாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபம் ஒருவனுக்கும்
லட்சோபம் லட்சம் பேர்க்கு
அகால மரணமாய் ......
நீர் கண்ட உலகின்
நிஜத்தை எடுத்தரைத்தீர்

சட்டங்கள், சாத்திரங்கள்
சமத்துவத்தைப் பறை சாற்றிப்
பின் -

மனித ரத்தத்தை
உறிஞ்சி பசி தீர்க்கும்

இரண்டக நிலையை
இறைவனிடம் முறையிட்டீர்.

அடிமைகளைக் கொண்டு
ஓட்டி செலப் படுகின்ற
ஆதிக்க வெறியரின்
கப்பல் மூழ்கடிக்கப்
படுதல் எப்போது என
அல்லாஹ்விடம் கேட்டீர்.

உரிமையிழந்து
உணர்ச்சியற்றுத் துயில்கின்ற
ஏழைகளை எழுப்புதற்கு
ஏக இறைவனை - தன்
மலக்குகளை ஏவச் செய்தீர்.

உழவனின் பசித்தீர்க்க
உதவாத நெல் மணிகள்
ஒன்றேனும் மிஞ்சாமல்
நெருப்பிட்டுப் பொசுக்குவதற்கு
அல்லாஹ் தன் அமரர்கட்கு
ஆணையிடச் செய்தீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியும், வறுமையும்
மக்களை வாட்டுகையில்
பளிங்கு வலங்கார மாளிகைகள்
தீபாலங் காரங்கள்
தேவையில்லை - எனை வணங்க
மண்குடிசை போதுமென
இறைவனை மொழிய வைத்தீர்.

ஆட்சிகள், அரசுகள்
பலதோன்றி மறைந்ததுவும்
பூமியைப் புரட்டுதற்குப்
புரட்சிகள் வெடித்ததுவும்

கண்டு இந்த நூற்றாண்டு
கண்மூடும் வேளையிலும்
ஒடுக்கு முறை, சுரண்டல்
அடிமைத்தனம் ஒழியவில்லை.

வறுமையும் வெம்பிணியும்
பட்டினிச் சாவுமாய் .....
கோடானு கோடிப்பேர்
கொடும் பசியால் வாடுகையில்
கோதுமையைக் கடலிலே
கொட்டுகின்ற கொடுமை

சூதும் சுரண்டலுமாய்
ஆதுமகன் சத்தாது
அமைத்த சுவர்க்கத்தில்
மூலதன முதலைகள்.

நுகர்வுப் பொருளாதார
நுகத்தடியில் மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித விடுதலை
சமத்துவம்
சகோதரத்துவம்
சக வாழ்வு என்பதெல்லாம்
செல்லாக்காசாய் ............

விழுமியங்கள் கூட இன்று
விற்பனைப்பண்டங்களாய்

அறவிலை வணிகரின்
ஏகபோகமாய்
ஆன்மீகம்

ஏகாதிபத்தியத்தின்
கைப்பாவையாய்
விஞ்ஞானம்
ஆன்மாவிலும்
உடம்பிலும்
பூட்டப்பட்ட விலங்குகளுடன்

பூகோள வலைப்பின்னலில்
சிக்குண்ட பூச்சியாய்
மனிதன்.

அணுவாயுதக்குவிப்பு.....
குண்டு வெடிப்பு.......

ஏவுகணைத்தாக்குதல் .......
பயங்கரவாதம் .......
யுத்தம் ....... பீதி.......

மனிதனைச் சூழ
மரணமே எங்குமாய்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கின் நலிவுக்கும்
மேற்கின் அழிவுக்கும்
காரணம் கண்டு
கவிதையில் சொன்னவனே,

விஞ்ஞானமும் மெய்ஞானமும்
ஆன்மீகமும் லௌகீகமும்
அன்பும் அறிவும்

இணைய முடியாத
இருவேறு முனைகளாய்த்தான்
விடியப் போகின்றதா
வருகின்ற நூற்றாண்டும்?

பூவின் இதழொன்றைத்
தென்றல் அசைத்தாலும்
உண்டாகும் அதிர்ச்சி
உள்ளத்தில் எதிரொலித்துக்
கண்ணீரை வருவிக்குமெனக்
கசிந்துருகிப் பாடியவரே

பூவினும் மென்மையாய்
நீர் போற்றிய பெண்மை
சேர்பிய ஓநாய்களின்
கூட்டுக் காமப்பசிக்கு
இரையாகிக்
கடித்துக் குதறப்பட்ட

கருக்கூட்டல் முகாம்களில்
கசக்கப்பட்டு
மென்று துப்பப்பட்ட
சேதியறிந்தால்
எவ்வளவு வதைப்பட்டுத்
துடித்திருப்பீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிப்போலியில் ஷஹீதான
தியாகிகளின் ரத்தத்தை
கலசத்தில் ஏந்தி
திருநபியின் சமுகத்துக்குக்
காணிக்கையாய்
கொண்டு சென்றவரே,

ஸய்லான் என
ஷெரந்தீப் என
நமது முன்னோர்
நனிது போற்றிய

பாவா ஆதமின்
பாதம் பட்ட மண்ணிலிருந்து

காருண்ய நபியிடம்
காணிக்கையாய் எடுத்துச் செல்ல
கவிஞனின் கலசத்தில்
எதனை நான் நிரப்புவேன்?

கிழக்கில் -
துரோகமிழைக்கப்பட்ட தருணம்
குண்டுகள் துழைத்த
தொழுகையாளரின்
தூய மேனியில்
தாரையாய் ஒழுகி
பள்ளித்தலங்களில்
பரவிய புனிதத்
தியாகக் குருதியின்
நினைவுத் துளிகளை?

வட புலத்திலிருந்து-
சொந்த வீடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்து சுகங்கள்
பறிக்கப்பட்டு
துப்பாக்கி முனையில்
துரத்தப்பட்டு

கிடுகோலைக் குடில்களில்
கிழிந்த கந்தலாய்
வாழ்க்கை வெறிச்சிட
அகதி முக(ா)ம்களில்
விழிகள் தேக்கிய
சோகத்துளிகளை?

அல்லாமாவே,
காருண்ய நபியிடம்
காணிக்கையாய் எடுத்துச் செல்ல
கவிஞனின் கலசத்தில்
எதனை நான் நிரப்புவேன்?

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்*

# உன்னைப் புரிந்தால் எல்லாம் புரியும்

ஆதியே அந்தமாகி,
அனைத்துமே சொந்தமாகி
வேதியே விளக்கமாகி
விளங்கிடும் பொருளுமாகி
அனைத்தையும் ஆக்குகின்ற
அவனுக்கு புகழனைத்தும்

ஆயிரம் மலர்கள் கொய்து,
அடுக்கியே கட்டில் செய்து
படுத்துக் கிடந்த போதும்
படுக்காது விட்டகோனே
பார் புகழ் நபிபிரானே
உம்மையே வாழ்த்துகின்றேன்
உன் புகழ் கூறுகின்றேன்.

அவைதனில் வீற்றிருப்போர்
அருங்கவி சாற்றவந்தோர்
இலக்கிய உணர்வு கொண்டோர்
அனைவருக்கும் தலைவராகி
அமர்ந்துள "துரையே" வாழ்க
நீடு நாள் வாழ்க வாழ்க
நின்புகழ் வாழ்க என்றும்

மங்காத புகழ் படைத்த
மருதூரின் புலவன் நானே
எனதூரின் வளத்தைச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பாலை நினைத்து இங்கு
சிக்வாலை பாட்டில் சொல்வேன்
கேட்போருக்கு எனது நன்றி.

எனதூரில் வண்டு
வனிதையர் இடைகண்டு
கள் ளென்று கவிபாடும்
அதுகண்டு கடலோசை
அசையோடு இசைபாடும்
இசைகேட்ட இளநண்டு
அலையோடு சதிராடும்
தலையாட்டும் நெற்கதிரும்
தளமாகும் தயிர் கடைவார்
சத்தமங்கே.
எல்லாம் பாட்டாகி
பாரெல்லாம் கேட்குமப்பா
கேட்கும். அப்-பா........

பாட்டிற்குப் பஞ்சம்
என்பரம்பரைக்கே கிடையாது
தும்மினாலும் பாட்டு
"தூ" என்றால் அது பாட்டு
எங்களூரில் பெண்கள்
எது செய்தாலும் பாட்டு
அம்மியரைத்தாலும் பாட்டு
ஆ என்று கொட்டாவி
விட்டாலும் பாட்டு
பாட்டிற்குப் பஞ்சம்
என் பரம்பரைக்கே கிடையாது.

உங்களூரின்
ஏலம் கராம்பு
எங்களூரில் பாட்டாகும்
கண்ணான மச்சிக்கு
நாங்கள்
காட்டும் உவமையிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சியே மாம்பழமே
மாமி பெத்த பாலகியே
ஏலம் கராம்பே - உனை
என்ன சொல்லிக கூப்பிடட்டும்
நாட்டார் பாடலில்,...............

நயமான வரிகளிது,
பாட்டிற்குப் பஞ்சம்
என் பரம்பரைக்கே கிடையாது.

ஆனாலும் எந்தனுக்கு
அல்லமா இக்பால் போல்
ஜவாபே சிக்வா
பாடல்
சிரமமென்பேன்
உண்மையைச் சொல்வதானால்
உணர்ச்சிகள் அவரைப் போல
கோடியில் ஒன்று கூட
எம்மிடையே இல்லையன்றோ.

அரேபியாவின்,
அஞ்ஞான இருட்டில்
சிலைகள் கடவுளாயினர்
முகம்மது எனும் விடியலின் போதுதான்
அவைகள்
வெறும் கற்கள்
என
தெரிய வந்தது.

சொர்க்கத்தைத் தேடி,
அலைந்த மானிடம்
முகம்மது எனும்
விடியலின் போதுதான்
தாயின் காலடி
“சொர்க்கம” என
கண்டு கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழைகள் பிறப்பதில்லை,
ஆக்கப்படுகிறார்களா"
என்ற உண்மை
"கார்ல் மார்க்ஸ" என்ற
விடியலின் போதுதான்
தெளிவாகத் தெரிந்தது.

ஊசியின் காதினுள்,
ஒட்டகம் புகுந்தாலும்
பணத்திமிர் கொண்டவர்
சொர்க்கம் புகாதது
"இயேசு" எனும்
விடியலின் போதுதான்
எல்லோருக்கும்
தெரிய வந்தது.

துவக்கும் தோட்டாவும்,
பீரங்கியின் பெரிய குண்டும்,
ஆனானப்பட்ட,
அதிரடிப்படையும்
கால்தூசி என்பதை.
அஹிம்சைப் போராளி,
அண்ணல் காந்தியின்
விடியலின் போது தான்,
அறிய முடிந்தது.

ஆடு மாடு,
அனைத்து உயிரும்,
மனித உயிரின்,
மாண்பு கொண்டதே,
என்ற உண்மை,
புத்தன் என்ற,
விடியலின் போதுதான்,
புரிய முடிந்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மண்ணோடு,
இணைந்து கிடந்து,
பாகிஸ்தான் எனும்,
இஸ்லாமியர் பூமியே,
இக்பால் எனும்,
விடியலின் போது தான்,
... அத்தேச மக்களால்,
அறிய முடிந்தது.

அல்லமா இக்பால்,
இலக்கிய வானில்,
முழு நிலவு,
அதனை,
விளையாடக் கேட்கும்,
குழந்தை நான்,

அல்லமா இக்பாலின்
"ஜவாபே" ஷிக்வா
மேருமலை
அதன் சிறு
மண்துகள்
என்கவிதை.

அல்லமா இக்பால்
மகாவலி கங்கை
அதன்
கரையிலிருந்து
பேனையால்
தொட்டெழுதியது தான்
எனது
ஷிக்வா.
இக்பாலின் ஜிக்வாவை
என்னால்
புரிய முடியவில்லை
என்னைப் போல்
அனேகருக்கு
இதே நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் தான்
இக்பாலை
“முர்த்தத” என்றனரோ?

கருவறை இருட்டிற்கு
பிறப்பு விடியலா?
துன்ப இருட்டிற்கு
இறப்பு விடியலா?
இறைவா
உன்னைத் தொழுதிடில்
எதற்குமே விடியலா?

விடியலின் போதும்
சிலருக்கு
விடியாதிருப்பதேன்

உண்மை புரிந்தது
அதனால்
உன்னைப் புரிந்தேன்
இறைவா
உன்னைப் புரிந்தோருக்கு
எல்லாமே புரியும்
புரியாதவர்க்கு
புரிய வைத்திட
இன்னுமொருமுறை
அல்லமா இக்பாலை
பூமியில் பிறக்கவை
சிக்வாவின் சிக்கறுக்க
இது
திறந்த வழியன்றோ.?

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் ஜின்னா ஷரிபுதீன்

# சமாதானத் தூதுவமே வா !

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

படைத்துலகை ஆளுகின்ற
பண்ணவனை முதற் கண் போற்றி
கவியரங்கின் நாயகரே!
கவிஞர் இக்பால்
கவிமேதை நினைவுக்கவி அரங்கத் தோரே!
கவிசொல் வோர்தம்
கவியமுது மாந்தித் தமிழ் இன்பம் தோய்க்கும்
கவிஞர்களே!
அனைவருக்கும்
புவியருளும் வல்லவனாம் தனியோன் தம்மின்
பேரருளை வேண்டி என்பா
தொடங்குகின்றேன்.

அஸ்ஸலாமு அலைக்கும் .

பலருமிங்கே தலைப்புக்கு ஏற்றவாறு
பாடியுள்ளார், பாடவுள்ளார்
புலன் கொண்டீர்கள்
நிலம் நோக்கும் பிரச்சினைகள்
நமது நாட்டின்
நிகழ்காலத் துன்பங்கள்
மொழி மதத்தால்
பலகாலமாய் நிகழும்
அனர்த்தம் தம்மைப்
பாடவுள்ளேன்
நான்பழகு தமிழால் ஓர்ந்தே
நலம்பெறவுண் டாயிலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வீர் தீர்வை
நமைப்படைத்தோன் கரம் விடுவோம்
செவியேற்பீரே.

போரேதான் முதல்
எங்கள் நாட்டைக் கொல்லும்
பெரும்பிணியாம்
பிறவனைத்தும்
அதன் பின்னேதான்
போரொழிய
மனுக்குலத்தை அழிவில் காக்க
பழிக்குடைந்தையாயிருப்போர்
மனந்திறந்து
யாரிடத்தில் முறையீடு செய்வதின்று
எல்லோரும் பொல்லாராய் இருக்கும் போது
யாரெவரோ காரணராம்
அவரே தத்தம்
இழிசெயலை ஓர்ந்தறிந்து திருந்த வேண்டும்.

பெரும்பான்மை
நாங்களிந்த நாட்டில் என்றே,
பேசித்தம் உரிமைநிலை நாட்டி
மற்றோர்
அருகதையே இலாரிந்த
நாட்டில் வாழ,
என்பவர்கள் தத்தமது மனத்திற்கே
முறையீடு செய்தே தாம்செய்யும் செய்கை
முறைதானோ? எனக் கேட்டுப்
பதிலும் கொண்டால்
முறைதவறிப் பேசுவதும்
செயலும் மாறி
மனுஅழிவும் நின்றமைதி
தோன்று மன்றோ!

மதபோதம் கூறிவழி
நடாத்து வோரும்
மதவெறியும் இனவெறியும •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டோராகி
மதவாத இனவாத
வெறிபரப்பும்
மனுநேயம் அற்றவராய்
இருப்பராயின்!
யாரிடத்தில்
சென்று முறை யீடுவதாமோ?
இனப்பூசல் மதப்பூசல்
தவிர்ப்பீர் என்றே.
தேராரோ தமக்கேதாம்
முறையீட்டோர்ந்து
தருமவழி செல அன்னார்
அமைதி தோன்ற.

சொந்தமிந்த நாடு நமக்(கு) என்று தானே
சொல்லுகின்றோம் அனைவருமே
அவ்வறாயின்,
எந்த மனங்கொண்டோம் நாம்
நமையல்லாதோர்
இடம்மாறிப் போங்களென
ஆணை செய்ய
வந்தவர்கள்
என்றால் நாம்
அனைத்துப் பேரும்
வந்தவர்கள் என்றால் நாம்
அனைத்துப் பேரும்
வந்தவரே
பிறப்பால்
இம்மண்ணுக்கென்றும்
சொந்தமெனில்
அனைவருமே சொந்தம்.
போகச்
சொல்லும் அதிகாரமெவர்
தமக்கும் இல்லை.

பிறந்த மண்ணை விட்டொதுங்கிப்
போங்கள் என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாதோ போங்கள் என்றார் ?
மனச்சாட்சிக்குப்
புறம்பான செய்கையெனப்
புரிந்துந்தானே
போங்களென்றார்.
போங்களென்றோர்
தமது செய்கை
புறம்பானதாம் மனித
நேயத்திற்குப்
பண்புடைமை ஆகாதென்(று)
அறிந்து செய்தார்.
முறைகேட்டை யாரிடத்தில்
முறையிட்டாலும்
மனந்திருந்த வேண்டியவர்
திருந்த வேண்டும்.

பெயரொன்றே முஸ்லிம் என்(று)
ஆனதாலே
பாலகரும் , முதியவரும், பெண்டீர் தாமும்
பயமின்றி வாழ்ந்த நிலை மறந்தே
ஓடிப் போங்கடா!
எனவிரட்டி அடித்த போது
பயமொன்றே காரணமாய்
ஆயுதத்தின்
பலங்கொண்டோர் ஆணைக்குப்
பணிந்தார் வேறு
செயலொன்றுஞ் செயவியலார்
யாரிடத்தில்
சென்று முறையீடுசெய்வார்
தாமாய் வந்தார்.

பிறந்த மண்ணில்
வாழமுடி யாதபோது
பிற நாடு சென்றுயர்
அடைவோரேரோடே
பிறந்த மண்ணில் அகதிகளாய்
ஒத்துவாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்ற பேர்களுமாய்
நமது மக்கள்
அறிந்தவரே பகைவர்களாய்
ஆனதாலே
அல்லலுறும் நிலையடுத்து
யாரிடத்தே!
முறையீடு செய்வதுவோ
அமைதியென்று
முளையிடுமோ
சமாதானம் தோன்று மாமோ?
கோடி கோடிப் பணம் சேர்த்துச்
சுகமாய் வாழ்ந்தோர்
கையேந்தி நிற்கின்றார்
அகதிப் பேராய்
தேடி அவர்நிலையறிந்தே
கரங்கொடுக்கச்
சிலரேதான் முயல்கின்றார்
முன்னர் வாழ்ந்த
வீடு வாசல் தமைமீண்டும்
பெற்று முன்போல்
வாழவவர்
விரும்பிடினும்
விரட்டியோர்கள்
நாடாத போது பிறர் தம்மை நாடி
நடந்தவற்றை முறையிட்டுப்
பயன் தான் என்ன?

ஆட்சிக்குப் பொறுப்பாக
உள்ளோர் தத்தம்
ஆயுளுக்கு பின்னால்தம்
சந்ததிக்கும்
தேட்டத்தில் முந்திபல்
கோடி சேர்த்துத்
தெரியாது பதுக்குங்கள்
வறுமைதன்னை
ஓட்டவழி செய்யுங்கள்
என்றவர் முன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரி செய்து முறை
யீட்டால் என்ன
நாட்டுக்கும் மக்களுக்கும் தேறும்
அந்த
நெறிகெட்டவர் தமைத்தாமே
திருத்தாராயின்.
முறையீட்டைக் கேட்டுதவி
செய்குவோர்தம்
முறைகெட்ட செயலாலே
முடியாதோராய்
நெறி கெட்ட வழிமூலம்
அமைதி தோற்ற
நினைக்கின்றார்.
தவிர்த்துப் பிறர் கோரிக்கைகள்
முறையாகப் பரஸ்பர நல்
உணர்வி னோடே
முறையீட்டின் பின் புரிந்துணர்வு
தெளிவு பெற்றால்
முறையான சமாதானம்
தோன்றும் நாட்டில்
மக்களொன்றி நாடுய்ய
வழிபிறக்கும்.

ஆளும்பே ராசைக்கொண்டோர்
தாமே இன்று
அரசியல் தீர்வொன்றுக்கும்
இணங்கார். மக்கள்
மாளும் போர் தமைத் தொடரக்
கருவுமானார்
மனந்திருந்த வேண்டாமோ
இருபுறத்தும்
ஆளழிந்தும் நிலம்மட்டும்
எஞ்சுமானால்
யாரையாமோ ஆளுவது?
மனு வேண்டாமோ
வேளைவரும் என்றிருந்தால் ஆகா ஒன்றி
வலிந்தமைதி பெற வேணும்
முயலவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டலந்தைச் சரித்திரத்தை
மறக்குமுன்னே
பிறிதொன்றாம்
மனித என்பு வேட்டை
இன்று
திட்டமிட்டுக் கொலைசெய்து
புதைக்குஞ் செய்கை
தொடர்ந்தே பொன்
மணிபோல இன்னும் இன்னும்
சட்டங்கள் தமைக்கையுள்
தாங்கிச் செய்யும்
சித்திரவதை கொலைகளெல்லாம்
ஒவ்வொன்றாகப்
பட்டுடையும் நிலைகண்டோம்
யாரிடத்தில் போயிதனை முறையீடு
செய்வதாமோ ?

அடித்தவனை
அடிப்பதுதான் முறைமையாகும்
அண்ணல் நபி வாக்கது தான்
நீ முன்னர்
அடிப்பது தான் தவறு என்றார்
நபிகள்
அன்பால்
அணைப்பதற்கு கூலிமிக
அதிகமாகும்.

கொன்றவனைக் கொல்வதுவும் ஆகும்.
ஆனால்
கொலையினிலும் மன்னிப்பே
உயர்ந்ததாகும்.
சென்றதெல்லாம் மறப்போம்
நாம் நாளைதொட்டுச்
சேர்ந்தொன்றி வாழ வழி
தேடிக் காண்போம்.

※ ※ ※


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் நிந்ததாசன்

# முறையீட்டு முகாரிகள்

தமிழுக்கு
என் முதல் வணக்கம்
கலாசாலைக் கவிதை
கவிதைக்குத்
தலைமை
இந்த
தலைமைக்கு
என்
முழு வணக்கம்

இந்த விடியலில்
மொழி உழவர்களை
விழிகள் விழுங்கின
அப்போது
பூக்கள் புன்னகைத்தன
உள்ளத்தில்!

சக பேனாப் போராளிகளே
என்
உணர்வால் கடைந்தெடுத்த
முதல் மரியாதை
உங்களுக்கு

இனி
ஒரு வானத்தின் தலைமையில்
நிலவொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிசிந்தப் போகிறது
ஒரு புலவனின்
பாதையில்
பூத்தூவ வந்திருக்கின்றேன்
அவனின்
பாதத்திற்கு
பா சமர்ப்பிக்க
முந்துகின்றேன்

அல்லமா இக்பால்
அவன் நெம்புகோல்
அவன் இங்கே
விதைத்த வார்த்தைகள்
அம்புகள்

அதனால்
அவன் புகழ்
நிண்ட தூரம் செல்லும்
காலத்தையே
கைது செய்து வெல்லும்

தீயானான் சிலருக்கு
தேன் ஆனான் சிலருக்கு
தேள் ஆனான் சிலருக்கு
வாள் ஆனான் பலருக்கு
ஆத்மீக வேருக்கோ
நீர் ஆனான் .

அந்த
பௌர்ணமிப் புலவனுக்கு
என்
நன்றிப் பூத்தூவல்கள்

அவன் கவிதை
மலராக விழுந்து
முள்ளாக எழுந்து
விதையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இதயங்கள்
தசையானது
ஈமானின்
பசையானது
இந்த பசுமைப் பந்தின்
ஓசையானது

அவன் பாஷையில்
முறையீடு
வாசமானது
இதயம்
வசமானது

இனி
மலரிடம்
வண்டு
என்ன முறையீடுகிறது ?
வாசம் பற்றி
உரையாடுகிறதா?
தேன்சுவை பற்றி
உரையாடுகிறதா?
தேன் சுவை பற்றிப் புகழ்கிறதா ?

காற்று
புல்லாங்குழலிடம்
முறையிடும் போதுதான்
இசை பிறக்கின்றதா?

கார் மேகம்
பூமியிடம் முறையிடுகிறதா?
ஓ... மழையைச்
சொல்கிறேன்

சோலைக்குள்
தென்றலுக்கு
என்ன வேலை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவு பார்க்க
வருகிறதா?
உரையாட வருகிறதா
இல்லை
முறையிடுகிறதா?

இரு பால்
செய்த பால் அழுகிறது
தாய்
அள்ளி அணைத்து
பாலூட்டுகின்றாள்
குழந்தையின்
முறையீடு
தாய்க்குப் புரிகிறது .

இங்கே
பலபேரின் முறையீடு
யாருக்குமே கேட்பதில்லை

கல்லூரி
வெண் மல்லிகைகளில்
முறையீடு பற்றி
அறிவுச் சலவைகளுக்கு
கவலை இல்லை

அறிவுச் சலவைகளின்
முறையீடு
அதிபரின்
கவனத்தை ஈர்ப்பதில்லை

முறைகேடு பற்றி
முறையிட்டால்
சிறைக் கதவுகள்தான்
இங்கே
திறக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ
வரப் போகின்றார்கள்
என்று
காகம் கரைந்து
முறையிடுகின்றது
அது புரிகிறது

பூனை
குறுக்காகக் கடந்து
சென்றால்
அதுவும் புரிகிறது.

மூட நம்பிக்கைகளே
இங்கே புரிகிறது
உண்மை பற்றி
முறையிட்டால்
பொய்ச்சாயம்
பூசப்படுகின்றது.

எங்கள்
புன்னகை கொய்து
வீசப்படுகின்றது .

சூரியன்
மேற்குப் பக்கம்
புதைந்து போனதும்
விண்மீன்கள்
நிலாவிடம்
முறையீடு செய்கின்றதா?

இந்த
உலகின் குறைபற்றி
இரவு வரைந்த
எழுத்துக்களா அவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகளின்
முறையீடு தென்றலிடம்

கலைகளின்
முறையீடு உணர்வுகளிடம்

நிலவின்
முறையீடு இரவிடம்

சிஷ்யனின் முறையீடு
குருவிடம்

அலைகளின்
முறையீடு கரையிடம்

புல்லின் நுனியில்
பனித்துளி
என்ன முறையீடு செய்கிறது

மின்மினிகள்
பறக்கும்
ஒளித் துளிகள்
இவை
இரவுகளைக் கௌரவப்படுத்தும்
சிறகு
நட்சத்திரங்கள்!
அவை இரவுக்கு
என்ன முறையீடு செய்கின்றன?

அவனுடைய
காதலை
குண்டு வைத்துத் தகர்த்தாள்
அவன்
இறந்து கிடக்கின்றான்
என்றாலும்
சுவாசிக்கின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்காக
ஓ ..........!
அவனின் முகத்தில்
கருமை
அது கூட
முறையீட்டின்
குறியீடு !

காதல்
ஊழால்
நிகழ்வதென்று
அகத்திணை
முறையீடு செய்கிறது
அது
ஊழாகும் போது
கண்ணீர் முறையீடாகிறது.

சூர்ப்பணகையின்
முறையீடு
இராவணனை அழித்தது.

பொற்கொல்லனின்
முறையீடு
பாண்டிய மன்னனுக்கு
இறுதியானது.

அது
அறத்தின் உயிருக்கு
விசம் வைத்தது.

பசுவின் முறையீடு
சோழனின் மைந்தனுக்கு
மரணங் கொடுத்தது.

அன்னப் பட்சியின்
முறையீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனனுக்கு
காதல் வழங்கியது.

குழந்தையின்
முறையீடு
பசிபற்றியது

சிறுவர்களின்
முறையீடு
விளையாட்டுப் பற்றியது

கன்னியின்
முறையிடு
திருமணம் பற்றியது

பெண்களின்
முறையீடு
சுதந்திரம் பற்றியது

மதச் சண்டைகள்
மனிதத்திற்கு
விசம் வைக்கும்

இனச் சண்டைகள்
இதயங்களுக்கு
குண்டு வைக்கும்

எல்லைச் சண்டைகள்
உதயங்களுக்கு
கறுப்புப் பூசும்

வேற்றுமை
வேர்விட்டு
வளர்ந்திருக்கிறது !
இங்கே ஒற்றுமை
கருவிலேயே
கலைக்கப்பட்டுக்கிடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள்களுக்கெல்லாம்
கால்கள் பூட்டி
அழைத்து வருகிறது
விஞ்ஞானம்
மூளை
உயிர்த்திருக்கிறது
அகம்
அழுக்காகி
சாக்கடையானது

இன்னும்
இங்கே பெண்ணினம்
ஜன்னல் கைதிகள்

சீதன அம்புவிடும்
இராமர்கள்
இங்கே ஏராளம்

போர்ப் புயலில்
சரிந்து விழும்
உயிர்கள்
நாளும்
குருதிக் குளியல்
இங்கே!

சிந்தனை
போதை மாத்திரை
உண்டதால்
இன வெறி
நிமிர்ந்து நிற்கிறது .

சிறுபான்மைக்கு
மூச்சுவிடக் கூட
சுதந்திரமில்லை

வடக்கும் கிழக்கும்
இங்கே சுடுகாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
சுடும் நாடா ?
சுடு நாடா?
சுடுகின்ற நாடா?

முகவரி
தொலைந்த மனிதர்கள்
உலகெங்கும்
அகதிகளாக!

ஊழல்களுக்கு
இங்கே
கைதட்டல்கள்
நிறையவே கிடைக்கின்றன
போலிகளுக்கோ
பொன்னாடை

வார்த்தைகளில்
ஜீவன் இல்லை
புன்னகையில்
உயிர் இல்லை

இங்கே
வேரில் நோய்
இருக்கிறது
கிளைகளுக்குத்தான்
வைத்தியம்
செய்யப்படுகிறது.

சமாதானம்
இந்தச் சொல்லில்
தீர்வு இருப்பது
இன்னும்
புரியவில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் அயல் எழுத்து
அரவினை
நீக்கி விடுங்கள்
எல்லோருக்கும்
சம - தானம் கிடைத்தால்
வெண்புறா உயிர்த்தெழும்
நம்புறா
துயர் நீங்கி வாழும்

இங்கே வியர்வை நதிகள்
சுரண்டல்
முற்றுகைக்குள்
ஏழையின் குருதிகுடிக்கும்
அட்டைகள்!

இப்படி
இந்த உலகத்தில்
எத்தனையோ ஓட்டைகள்

கலப்பட வியாபாரிக்கு
கௌரவம்
கிடைக்கிறது.

கொள்ளை லாபக்காரனுக்கு
வெள்ளையுள்ளம்
பட்டம்

உண்மையில்
கழுத்துக்குக் கையிறு!

பொய்
சுதந்திரமாக
சுவாசிக்கிறது

கடத்தல் காரன்
உயர்ந்த இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் இங்கே
வாழ்க்கை செய்கிறது

பணம் இங்கே
உலகு செய்கிறது

குணம்
இல்லாத வாழ்க்கை
மணம் இல்லாத
மனங்கள் !

இப்படி
இன்னும் இன்னும்
எத்தனை
ஓட்டைகள்
இங்கே!

இந்த
முட்களை அகற்ற வேண்டும்
இந்த
நீண்ட இரவினை
துடைக்க வேண்டும்
இந்த
அழுக்குகளை
சலவை செய்ய வேண்டும்

வேற்றுமைக்கு
வெடி வைப்போம்!
ஒற்றுமை
கொடி நாட்டுவோம்
கற்களை
பூக்களாக்குவோம்

எம் சொற்களை
எம் சுதந்திரத்திற்காக
சமர்ப்பிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சங்கீதக்காலம்
செய்வோம்
இருள் நெருங்காத
விடியல் செய்வோம்

அன்பு
நெய்வோம்
இந்த
கறுப்பு யுகத்திற்கு
வெள்ளையடிக்க வேண்டும்

இந்த
நெருப்புக் காலத்திற்கு
நீர் வார்க்க வேண்டும்

இந்த
நிர்வாணப் பாதத்திற்கு
செருப்புக்
கொடுக்க வேண்டும்

தென்றலாகுவோம்
சிறைவைக்க
முடியாது என்பதால்
கடலாகுவோம்
மூடிபோட முடியாதென்பதால்
அருவியாகுவோம்
அணைக்கட்டுப்
போடமுடியாதென்பதால்

தென்றலாக வீசுவோம்
புயலாகப் புறப்படுவோம்
சூறாவளியாக
சுழன்றாடுவோம்

ஏனென்றால்
எம் ரத்தத்தில் இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பு நிறம்
மட்டுமல்ல
எம் சந்ததியின்
சரித்திரமுந்தான்

என்
முறையீடு
அருந்திய செவிகளுக்கு
புன்னகை வீசுகின்றேன்
நன்றித் தென்றலை
சமர்ப்பிக்கிறேன்
வாழ்த்துப்பூக்களைச்
சொரிகின்றேன்

உங்கள்
அகச்சோலையில்
மகிழ்ச்சிப் பூக்கள்
பூத்துக் குலுங்கட்டும்
சுகத் தென்றல்
உலா வரட்டும்

என் பிரார்த்தனை
விண்ணப்பத்தை
இறைவனிடம்
முறையீடு
செய்து
விடைபெறுகின்றேன்
ஸலாம் !
வணக்கம்!

※ ※ ※



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஷர்மிளா ஏ. றஹீம்*
பேராதனைப் பல்கலைக்கழகம்

# பூக்களின் பூகம்பம்

விடிவு, வெளிச்சம் என்பது
கனவாய் போய்விட,
ஓரளவென்னும் முகாந்திரத்துள்
தள்ளப்பட்ட மானுடம்.

எத்தனையோ விடியல்கள்
வந்து போனாலும்
இருள்மட்டும் அதிகம்
எங்கள் வாழ்க்கையில்.

உலகில் உதாசீனம்
செய்யப்பட்டவர்களா
நாங்கள்?
எங்களின் கூக்குரல்கள்
எப்போதுமே
அவர்கள் செவிகளில்
விழுந்ததில்லை.

கல்லும் கரைந்தவிடும்
எங்கள் கதறல் கேட்டு.
அவர்களிடம்தான்
அசைவைக் கூடக்
காண முடிவதில்லை.

சில வெறித்தலைகள் விடுக்கும்
வேதாந்த உத்தரவுகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தப்பட்ட - அந்தத்
துப்பாக்கி ரைவகள்
எப்பாக்கியும் வையாமல்
குந்துக்களை கூட
சந்து சந்தாக்கி விடுகின்ற
அவலம்!

நாளை,
எமக்கும் விடியும்
என்ற எதிர்பார்ப்போடு
கண்விழிக்கின்ற இதயங்களில்
எரிமலையின் குழம்பைக்
கொட்டிவிடும்
கொடுமை!

சந்தோஷச் சிரிப்பினைக்
கேட்டு காத்திருக்கும்
நெஞ்சங்கள்,
அவலக் குரலோசை கேட்டு
அதிர்ந்து போய் நிற்கும்
பரிதாபம்!

அத்தனையும் இழந்து
நாதியற்றவர்களாய்,
நடைப் பிணமாய் நிற்கின்ற
மனித ஜீவன்கள்.

கருணையைத் தொலைத்துவிட்டு
மனதைக் கல்லாய் வைத்திருப்பவர்கள்
வாக்குறுதிகளைத் தந்துவிட்டதால்
ஏதோவொரு நம்பிக்கையில்
நம்பிக் கை கொடுக்கின்ற
ஜீவன்களின் வாழ்க்கை
தந்தி அறுந்து விட்ட
வீணையாய்...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநோதமான ரூபங்களில்
வேஷம் போடும் தந்திரம்
அவர்களுக்கு மட்டும் கை வந்த கலை.

அகிம்சை தூக்கில் தொங்குவதால்
மகாத்மாக்களுக்கு
இங்கு வேலையில்லை.

வெறிபிடித்த
மனிதர்களின் கைகளில்
சின்னா பின்னமாகிக் கொண்டிருகிறது
எங்கள் வாழ்க்கை.

விடியல் என்ற
கனவைக் களைந்து
எதிர்காலமே இல்லாமல்
இருட்டில் தள்ளிவிட்டார்கள்
அவர்கள்.

மனித உயிர்களை
மலிவாய் நினைத்து விட்ட
அவர்களின் இதயங்களில்
ஈரத்தை எங்கே காண்பது.

அவர்களின் அரக்கத்தனத்திற்குப்
பலியாகி நிற்கும்
அப்பாவிகளைக் கூட
பாவிகளாய் நினைத்ததால்
புதைகுழிகள் நிரம்பி வழிகின்றன.

சிந்திய இரத்தம்
போதாதா?
உலகம்
நிறம் மாறிப் போவதற்கு
இன்னும் ஏன் இந்த
வெறியாட்டம்
நாற்காலி கிடைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரபலி கொடுத்தால்
இறந்த பெயர்கள்
காணாமல் போனோர் பட்டியலில்
மளிகைச் சாமான்களின்
மாதாந்த லிஸ்டாய்
நீழ்கிறது.

பிள்ளையைக் கிள்ளி
தொட்டிலை ஆட்டிவிடும் பாவனையில்
விசாரணைக் கமி ன்
அமைப்பதாய்
ஒரு கண்துடைப்பு

நீதி தேவதையும்
கண்கள்கட்டுப் பட்டுவிட்டதால்
காதும் கேளாது போய்விட்ட
அதிசயம் இங்குதான்

தெரிந்தும் தெரியாததால்
நடிப்பவர்களிடம்
எதைப் போய்ச் சொல்லுவது
என்னவென்று நீதி கேட்பது ?

கரன்ஸிகள்
கண் விழித்திருப்பதால்
முறையீட்டு மனுக்கள்
மூலையில்
இடம் தேடிக் கொண்டன.

செத்தவனைக் கூட
ஏலம் போடுகின்ற
எத்தர்கள்
நாடுகளில் மலிந்து விட்டதால்
உலகமே
நாறிப்போய்க் கிடக்கிறது.
மனிதன் நீசனாய்ப்
போனதற்காய்
மிருகங்கள் கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்திக் கொள்கின்றன.
நாங்கள் மிருகத்தைப் பார்த்து
பயப்படுவதில்லை.
அதன் தரத்தில்
இப்போது மனிதன் இருப்பதால்

பிசாசுகள் கூட
மலிந்து விட்டன
காட்டேறியாய்
மனிதன் மாறிவிட்டதால்

அதனால்தான்
ஓடுகின்ற குருதியாற்றில்
மீண்டும் மீண்டும்
எங்களை
குளிப்பாட்ட நினைக்கிறார்கள்
அவர்கள்.

வாழ்க்கையே
வெறுமை என்றாகி விட்டபோது
எந்த ஆதாரத்தில் வாழ்வது?

ஒரு வெறிபிடித்த
மனிதர்களின் கைகளில்
சின்னா பின்னமாகிக்
கொண்டிருக்கிறது
எங்கள் வாழ்க்கை

எதைக் கேட்டு விட்டோம்
என்பதற்காக இப்படி (க்)
கசக்கிப் பிழிகிறார்கள்
எங்களை

உலகையா எழுதிக் கேட்டோம்
உரிமையைத் தானே
ஏன் கொதிக்கிறார்கள்
இழக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வாழ்க்கையல்லவா?
சிறு பான்மையாய்ப் பிறந்தது
எங்கள் குற்றமல்ல
அதனால்தான் இன்னும்
பொறுமையுடன்
காத்திருக்கிறோம்.

காத்திருக்கும் நாங்கள்
கையேந்தி நிற்கும்
இரவலர்கள ல்ல
எளிதாய் விரட்ட விட

நசுக்கி விட நினைப்பது
நடவாத காரியம்
வித்துக்களல்ல நாங்கள்
விருட்சங்கள்.

முறையீட்டு மனுக்களை
கிழித்தெறிந்து விட்டு
எதிர்த்து நிற்க
எமக்கு நாழிகை யாகாது.

பூக்களாய் மலர்ந்திருக்கும்
எமக்குள்ளும்
பூகம்பம் ஒழிந்திருக்கிறது
அது
வெடித்துச் சிதறி விட்டால்
உலகத்திற்கு
அக்கினி அபிஷேகம்தான்

ஆனால்
நாளை என்ற
அந்த நாளில்
எஞ்சப் போவது.... ?

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எஸ்.எல்.எம். கரீம*
பேராதனைப் பல்கலைக்கழகம்

# தொலைந்த மண்

பேனை முனையில்
புரட்சி செய்த பொக்கிஷமே!
பாரைத் தட்டிப்
பார்வை தந்த பகலவனே!
போதம் செய்து புதுமை செய்த
புரட்சி நிலவே!
முட்டிக் கதவெல்லாம்
தட்டி முடியாமல் -உன்
அடக்க வறைக்கே -என்
முறையீடுகளைத் தொடுக்க
விளைகிறேன் - நான்
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

சுட்ட பூமியில்
துடிக்கும் புளுவாக -இதை
தொடுத்து நிற்கிறேன்
வெடித்த மனங்களின்
வெக்கை தாங்காது -கண் வடித்து
நிற்கிறேன்
கடிக்கும் எறும்புக்குள்
துடிக்கும் குழந்தையாய்
கதறி நிற்கிறேன்
ஏ.... அல்லாமா -நான்
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?
குண்டுகள் குத்திக்
குழிவிழுந்த மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டுகள் கொட்டிய
கண்டுகளாய் நிற்கிறோம் - எம்
கன்றுகள் மொட்டில்
தளிர் தளைக்க -உன்
கையெழுத்தால் சொட்டும்
கவி உரம் கேட்டு -நான்
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

முளைத்த மண்ணில்
நிலைக்க வகையின்றி
தொலைத்து மண்ணை
மலைத்து நிற்கிறோம்
அளக்கும் படிக்குள்
இடுப்பை முடக்கி
அகதிக் குகைகக்குள்
அடங்கிக் கிடக்கிறோம்
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

வட்ட மாங்காய்க்குள்
வெட்டி ஓடுகின்ற
(இ) ரத்த ஆறு காணாது
பட்டு மண்ணுக்குள்
சிறுகோலு மில்லாது
ஏன் அங்கு தூங்குகிறாய்? - உன்
(பு)ரட்சிப் பேனாக்குப்
புத்துயிரைக் கேட்டு
தட்டுகிறேன் கல்லறையை
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

நித்தம் புது நூலால்
நிமிர்த்தி நிறுத்தி -உன்
சத்தியத்தைக் காத்தாயே
வெந்த மனங்களுக்கு
வெக்கை தணிக்கும்படி
வெளியீடு தந்தாயே -எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தும் குரல்களுக்கு -உன்
கல்லறைச் சுவர்களுக்குள்
ஓர் சப்தம் கிடைக்காதா?

(து) வேஷத்தின் ஓட்டுக்குள்
நன்றான மக்களுக்கு
சோபனங்கள் தந்தாயே!
தேசத்தின் கூட்டுக்குள்
சிறுசான எங்களுக்கு
பெரு மூச்சு கண்டாயே
குட்டிக் குழிக்குள்ளே
குறுந் தூக்கம் கொள்பவரே!
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

சுட்டும் திசையெல்லாம்
வெட்டில் கிளியாக
பத்தும் யுத்தத்தில்
பத்தி எரிகின்றோம்.
கட்டி அரவணைத்துப்
பட்டதுயர் நீக்க
பக்க துணையின்றி
பரிதவித்து நிற்கின்றோம்
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

வீர மனங்களுக்கு
வித்திட்ட உன் பேனா
கோழைப் பிணங்களுக்கும்
வீரத்தைப் பாய்ச்சியது
பாரை இடுக்கிருந்த
இங்கிலிஸம் அவிழ்வதற்கு
வாளாய்ச் சுழறியது
வார்த்தையினால் உன் பேனா
பேனை பிடித்த உந்தன்
பெரு விரலை முத்தமிட
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச கதிரைகளில்
அப்பிய தூசுகளை
தட்டித் துடைத்து -உன்
தத்துவ வார்த்தைகள்
வாக்குச் சந்தைகளில்
சாக்கு நிறைப் போரை
சூட்டுக் கோலாக
சுட்டது உன் பேனா
தட்டி இறக்குமிந்த
தரணி மிளிர்வதற்கு
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

அடக்கு முறையின்
அருகில் பிறந்து
ஒடுக்கு மினத்தின்
உரத்தைத் தணிதாய்
அடங்கி வாழ
அடிமை அல்ல
தொடங்கி விட்டாய்
சுதந்திர கீதம்
கொட்டும் முரசாய்
பத்திய தீபம்
பெற்றுத் தந்து
பா கிஸ்தானை
எமக்கும் கீதம்
இயற்றிக் கேட்டு
தட்டும் கதவுக்கோர் சப்தம் தருவாயா?

நாலு சுவருக்குள்
சிறைப்பட்ட பெண்மைக்கு
திறவு கோலாக
சீறயது உன் பேனா
அடுப்புக் கல்லுக்குள்
புரட்சித்த அவள் காற்று
அரண்மனை பீடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார ஒலியாட்சி
பாலூட்டும் தாயாவே
பார் கண்ட பெண்ணை
மார் தட்டும் பெண்ணாக
மாற்றியது உன் பேனா -உன்
பேனா அரவத்தில்
பயணிக்க விளைகின்றேன்.
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

மடமையின் மடிக்குள்
மண்டியிட்ட பெண்மைக்கு
கடமையே காட்டும் கைகோல்தான்
உன்பேனா
விடியலைத் தேடும்
விடியாத பெண்களுக்கு
உதயத்தைக் காட்டும்
விடிவெள்ளி உன் பேனா
படிகட்டித் தந்து
வழிவிட்ட குருவே -நான்
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

சீதனச் சுமைகளினால்
சீரழியும் பெண்களுக்கு
வேதனைச் சுமையிறக்கும்
வேத மொழி உன் பேனா
ஆதனச் சுமைகளுக்காய்
அரங்கேறும் ஆண்களுக்கு
தீ யெனத் தீர்க்கும்
தீ பிளம்பு உன் பேனா
புத்தூக்கம் பெற்ற
புது உலகு காண்பதற்கு
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?
தொட்டில் குழந்தைக்கு
தாலாட்டும் உன் பேனா
கட்டில் உறவுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசங்கள் உன் பேனா
தட்டும் இசைகளுக்கு
புதுப் பாட்டும் உன் பேனா
கொட்டும் முரசுக்கும்
வீரப் பா உன் பேனா
காலத்தின் தூரத்தால்
கரையாத உன் வார்த்தை
மரணத்தின் வரவுக்கும்
மறையாத உன் வார்த்தை
தட்டும் கதவுக்கோர் சப்தம் கிடைக்காதா?

பார்த்து எழுதவே
பழகிவிட்ட நாங்கள்
வார்த்து எழுதவோ
வார்த்தையின்றி விக்குகிறோம்.

⁕ ⁕ ⁕



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லறீனா அப்துல் ஹக்
பேராதனை பல்கலைக்கழகம்

## முகவரி தொலைந்த முகாரி

பொத்திப் பொத்தி
வளர்த்த மகன்
போன இடம் தெரியாமல்
பரிதவிக்கும் தாய் மனது
முறையீட்டு மனுவெழுதி
ஏறாத படியில்லை..
தட்டாத கதவில்லை.
திட்டிவிரட்டினர்
சிலபேர்
எட்டவே நிறுத்தினர்
பலபேர்
மொத்தத்தில் ....
தீர்வுஅவருக்கு
தீர்வுப் பொதியை ப்
போலாயிற்று.

அதிகாரம் பெறும்வரை
கைகூப்பியவர்கள்
இறைவனின்
கண்ணீர் கண்டு
கரையவில்லை
கதறல் கேட்டும்
இளகவில்லை.
நடந்து நடந்து
நடையும் தளர்ந்து....
நாவுமுலர்ந்து ....
நீதி கேட்டவள்
நாதியற்றுப் போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்போல்...
இன்னும் எத்தனை
அன்னையர்
கண்ணீரோடு?
பிறந்த மண்ணிலே
பனாதையாகி....
அனாதையாகி ....
அகதிகளாகி .....
எலும்பு போர்த்த
வெறும்கூடுகளாய் ...
எதிர்காலந்தொலைந்து
இருளின் மைந்தராய்....
இன்னும் எத்தனை
எத்தனை காலம்
இப்படி இவர்கள்
இருக்கப்போகின்றனர்?

மனிதனை மனிதனே
வேட்டையாடிடும்
மிருகமாய்
உருமாற்றமுறுவதை
நிறுத்திடயாருமே
முன்வரவில்லை!
பாமரர் நினைத்தும்
ஆவது என்ன?
பதவியிலுள்ளோர்
நினைப்பதுமுண்டோ?
சமாதானம் மண்ணில்
மலர்ந்துவிட்டால்
சொந்த லாபமெல்லாம்
பூச்சியமாகுமென்று
கணக்குப் போடுவோர்க்கு
நொந்த உள்ளங்களின்
வேதனை புரியுமா?
அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்ததெல்லாம்
கறுப்பு- வெள்ளையாய்
"கரன்ஸி" சேர்ப்பதுதான்.

பசுமை பூத்திடும்
பூமியிலின்று
காணுமிடந்தோறும்
குருதியின் தடம்பூ
கண்டும் காணாது
"கதைவிடும்" அவர்கள்
பதவிக்கும் பணத்துக்கும்
மனசாட்சியை
அடகு
வைத்துவிட்டவர்கள்
அங்கே.....
முறையீட்டு மனுக்கள்
முகவரி தொலைந்து...
முகாரி இசைத்தபடி
மூலையிலுள்ள
குப்பைக்கூடைக்குள்!

"மக(ளை)னைக் காணவில்லை
மாதக்கணக்காயிற்று"

"பாலியல் குற்றங்களால்
பாலகர் பலி"

"மதக்கலவரத்தில்
பலர் படுகொலை"
பத்திரிகைகளில்
தலைப்புச் செய்திகள்
தினம் தினம்
பவனி
ஆனால்....
அவர்கள் "எதற்குமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்து கொடுப்பதில்லை.
அட,
ஏ.சி. அறைக்குள்
"தண்ணி" யில்
மிதப்போருக்கு
மக்களின்
கண்ணீர் பற்றி
என்ன அக்கறை?

இங்கே....
முறையீட்டு முறைமையே
அர்த்தமிழந்ததாய்
அவலகீதம்
இசைத்தபடி!
கேள்விகேட்கும்
கடப்பாடுடையோரே
கேள்விக்குறிகளாய்!

மனித நேயத்துக்கு
சாவுமணியடிக்கும்
"சிறந்த பணிகள்(!)"
செவ்வனே தொடர
நீதி மாதாவின்
கண்கள் மட்டுமா?
கைகளுங்கூட
கட்டவிழ்க்காமல்!

கொடுமையும் கொடூரமும்
தலைவிரித்தாடிட
பிணங்களுக்கு
மேலிருந்தும்
பணப்பேரம் செய்வோரிடம்
இதய ஈரத்தினை
எதிர்பார்க்கலாமோ?
இழவுவீட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பேசி,
இலாபமீட்டவரும்
இதயமற்றோரிடம்
இழப்புக்களை
சொல்லியழுவதா?
சொல்லியழுதாலுந்தான்
தீர்வு கிடைக்குமோ?

கிருஷாந்திகளின்
மானமும் உடலும்
மீண்டும் மீண்டும்
மண்ணுள் போவதில்...
செம்மணியகழ்வுகள்
தொடர்கதையாவதில் ....
மாற்றமெதுவும்
நிகழ்ந்திடுமோ?

ஹ...ம்!
நாடொறும் போரினால்
நாடு சிதைவதை
நெஞ்சு வெடித்திட
பார்த்திருப்பதுவோ?
வரும் வரும்
விடிவென்று- இனி
எத்தனை இரவுகள்
காத்திருப்பதுவோ?

ஓ..... !
பேதைப் பெண்ணே
கிழித்தெறியந்த
பழுப்பேறிப்போன
முறையீட்டு மனுவை!
இனியும்
உன் கண்ணீரை
அவர் தம் காலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சிக்காதே!
ஏனென்றால்,
அவர்கள்......
மனசாட்சியையே
அடகு
வைத்துவிட்டவர்கள்!
வேண்டாம் வேண்டாம்!
உன்
விழிநீரை இனியும்
கழுநீராக்காதே!

இன்றாவது- நீ
அறிந்துகொள்
நீதியின் கதவுகட்கு
இடப்பட்டாயிற்று
நிரந்தரத் தாழ்ப்பாள்!

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.எம். இர்பான்
பேராதனை பல்கலைக்கழகம்

# முடியா மூச்சுக்கள்

இந்தச் தேசத்தின்
தெருக்களை எரித்துச் சென்ற
இனத்தீயிற்குள்
மனிதத்தைத் தேடியவனாய்
மீண்டும்
பூந்தளிர்க் கனவுகள்
அரும்பவேண்டுமென்ற ஏக்கத்தைத்தான்
சோகத்துடன்
முறையீடு செய்கிறேன்.

இனம்
இப்பூமியின் புத்திரர்களுக்கு
கருவறையில் கொடுக்கப்படும்
முதல் பால் - ஆனதினால்தான்
தேசம் முழுதும் அடுப்பெரித்து
மனிதங்களைச் சமைத்து
தேசமே சாப்பிடுகிறது.

உயிர்ச் சலனத்தின்
அடங்காத பசியாய்
இனப் பசி.

இனச் சுத்திகரிப்பின்
கோரப் பிடிக்குள்
மனிதாபிமானம்
மிருகாபிமானமாகிடும் அவலம்.
நேயங்களைத் தொலைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றுடம்புகளாய்
இந்த மனதாத்மாக்கள்
காலங் காலமாய்
களி நடனம் புரியுமிந்த
இனவாதப் பேய்கக்குப் பலியாகிடும் கட்டிடம்
இன்னுமிருக்கிறது.

தீண்ட முடியாத
தீவுகளாய்
மானுட உள்ளங்களின்
பரிணாமம்.

இனவாதம் முடமாக்கிய
மனிதக் கிளிஞ்சல்கள்
பட்டியலில் நாளை
உன் பெயர் கூட
இடம் பிடித்து விடலாம்.

வெறும் நாளங்களால் ரணங்களைத்
தோற்று வித்து
கழிந்து கழிந்து ஒவ்வொரு மனிதனும்
ஒவ்வொருவருக்கும்
அந்நியனாகி விட்டான்.

நிஜப்பூக்களை மிதித்தவாறே
ஒவ்வொரு மானுடனும்
காகிதப் பு்பங்களாய்
ஏங்கிடும் சோகம்.

இன்று கொழுந்து விட்டெரியும்
அக்கினிப் பிழம்புகளுக்குள்
சிறகு கருகி செத்துப் போகுமிந்த
விட்டில் மனிதர்கள்.

கூந்தலிற் சிக்கெடுப்பதாய்
கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரங்களையே
கூறுபோடும் மனிதர்கள் மிகு காலமிது.

மனிதம் கொளுத்தப்பட்ட
அந்த
கறுப்பு ஜூலையில்
இனவாதப் பேய் குடித்த
சிவப்பு ரத்தம்தான்
செங்கதிர்களில் பிரதிபலிக்கிறது.

மனிதச் சதையுண்ணும்
மேற்குலக ஏகாதிபத்தியம்
விதைத்துச் சென்ற நச்சு விதை
தென்னாபிரிக்காவிலும் விருட்சமாகியது.

அந்த வெள்ளை வல்லூறுகள்
கறுப்பினப் புறாக்களைக்
கொத்திக் கொத்தி
குருதியல்லவா குடித்தன.

தாக்குண்டால்
புழுக்கள் கூடத்
தரை விட்டுத் துள்ளும்
சிங்கம்
மூர்க்கமாய்த் தாக்கும்போது
முயல்கள் கூட எதிர்த்து நிற்கும்
என்பதை நிருபித்த நெல்சனை
சிறைக்கைதிகள்தானே
அங்கீகரித்தனர்.

எங்கும் யுத்தகளமாய்
எவ்விடமும் ரத்தக் கறையாய்
பொஸ்னியத் தெருக்களில்
பிணவாடையில்லா
நிம்மதிக் காற்றுக்களின் சுவாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றுக் கனலாய்...
இரத்த வெறி பிடித்தலைந்த
சேர்பியக் கழுகுகளுக்கும்
குரோசியக் கரடிகளுக்கும்
பொஸ்னியச் சிறுவர்களின்
செங்குருதிதான் அபிஷேகமானது.

தம்மை மட்டும்
பூமி புத்திர எனக் கோடு கிழிக்க நினைக்கும்
பேரினவாத உள்ளங்களில்
இந்தியச் சேரிகளுக்குள்
ஐதீக அம்புகள் துளைத்த
அரிஜனக் குடிசைகளில்
மேற்கின் கருவறையில்
முறையற்றுப் பிறந்த
டெல் அவிவ் தெருக்களில்
இன்னும்
இனவாதம் மிச்சமிருக்கிறது.

இனிவரும் யுகங்களில்
இனவாதம் மறந்திட
எம் ஒவ்வொரு வரினதும்
மூச்சுக்களை... அர்ப்பணத்துடன்
ஏற்றிடுவோம்.

அதுவரையும்
இந்தப் பாரில்
நாளை நம்பிக்கையற்றதாய்
நிச்சயமிருக்கும்..

※ ※ ※



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிக்கோயா. எம். எச். எம். ஜவ்பர்**
பேராதனைப் பல்கலைக்கழகம்

# மனித கொடூரம்

அன்னை அன்னை என்றழைத்தாய்
மண்ணை.

பெருமை எனும்
புனைப்பெயரும் புனைந்தோம்.

நேற்று-
குலுங்கி நின்றது நிலம்

முகில்களை உரசி சிரித்த கோபுரங்கள்
நெல் மணிகளாய் சிதறின
சிதறி புதைந்தன

காற்றைத் தழுவி ஆர்ப்பரித்திருந்த
மரங்கள்
தன் வேர்களுக்குள் ஒண்டின.
தீவுகளாய் சிதறிக்கிடந்தவர்கள்
பிணமான பின்பு குவிந்தார்கள்.

ஒரு தேசமே
கல்லறையானது.

எருமைகள்
நீலக் கண்ணீர் வடித்தன
சோகங்களை அள்ளி இறைத்தன
புதினப் பத்திரிகைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண நாற்றம்.
கோடிச் சாபத்தில்
பூமிப் பெண் நடுங்கிப்போனாள்.

ஒரு முதுமைத் தாய்போல
மௌனத்தை மூச்சாகக் கொண்டு
முடங்கிக்கிடந்த பூமி
வாய் கேட்டு தொழுதது
வள்ளலும் வழங்கினான்
மழையென விழுந்தது வாய்கள்.

பூமிப் பெண்
முறையீடு சொல்ல வந்தாள்.

வள்ளலே! வணங்குகின்றேன்.

என் இரு முனைகளிலும்
பனி
வருத்தமில்லை

"இடையில்"
இரும்பையே உருக்கும் உஷ்ணம்
பொறுத்துக் கொள்கின்றேன்.

என் மேனியெங்கும்
சமுத்திரத் தேமல்
சகித்துக் கொள்கின்றேன்.

உடம்பில்-
பாறைப் பருக்கள்
மலைக் கழலைகள்
தாங்கிக் கொண்டிருக்கிறேன்.

ஆதியில்
என்னை அள்ளிப் படைத்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னச் சின்ன மனிதர்களை
அவர்களைத்தான் சுமக்க முடியவில்லை

முரண்களின் சின்னங்களாக
அழிவின் சிகரங்களாக
தந்திரங்களின் பிறப்பிடமாக....
மனிதர்கள் கொடூரம்.
இறைவனே!
மனிதர்கள் கொடூரம்.

என் மேனியை
கீறிப் பிளக்கின்றனர்
விதைகளை விதைக்கின்றனர்
அட்சய பாத்திரமாய்
அலர்கின்றேன்.

என்னை தோண்டுகின்றனர்.
புதையல்களை பரிசளிக்கின்றேன்.

என்னை தாய் என்கின்றனர்
என்னையும் விலையும் பேசுகின்றனர்.

பூ என்பதுதான்
என் பொதுப் பெயர்
என்றாலும்
என் அங்கங்கள் தோறும்
ஊர்ப் புண்கள்.

புண்களை ஆக்கிரமிக்கும்
புழுக்கள் மனிதர்கள்

வாழும் போது மடியிலும்
மரணித்த பின் வயிற்றுலும் தாங்கி
தாலாட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி கெட்டவர்கள்
என்னை பிணந்தின்னி
என்று நினைத்துக் கொண்டார்கள்.
உழைப்பாளிகளின்
வியர்வைகளை பருகியது உண்மைதான்
ஆனால்-
அவர்களின் குருதியை குடிக்க
முடியவில்லை.
என் மேனியெங்கிலும்
மனித ரத்தம்

சமயங்கள், இனங்கள்,
நாடுகள், மொழிகள்...
ரத்த மழை பெய்யும்
மேகங்களாயின.

ரத்தப் பிரளயத்தில் ஜீவிக்க
நான் மனிதன் இல்லை.
நான் மனிதன் இல்லை.
நான் மனிதன் இல்லை.

இன்று-
கல்வி சாலைகள்
பட்டங்களை உறபத்திசெய்யும்
பட்டச் சாலைகளாகிவிட்டன.

வணக்கஸ்தலங்கள்
கத்தரிக் கோல்களாகிவிட்டன

மக்கள் சபைகள்
பட்ட மரச்சோலைகள்

நீதி-
நீதிபதிகளின்
சட்டைப் பைகளாகிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம்-
பிரபுக்களின் பிரம்புகளாகிவிட்டன.

எழுதுகோல்கள்
தன்னை ஊன்றிக் கொள்ளும்
ஊன்று கோல்களாகிவிட்டன.

தத்துவங்கள் பல
குரங்குகளின் கைகளில்
பூமாலை களாகி விட்டன.

உன் ஈசான்
என்னை உறிஞ்சும்
உண்ணியாகி விட்டான்.

ஒன்றில் என்னை அழித்துவிடு
அன்றேல் மனிதனின்
ஆறாவது அறிவை
அப்புறப் படுத்தி விடு.

பூமி முடிக்கவில்லை
முறையீடு கூறி முடிக்கவில்லை.

இறைவன் சொன்னான்

"உன் வேதனை உண்மையானது
உன் முறையீடும் முறையானது
என் தீர்ப்பை நாளை சொல்வேன்."

முட்டாள் பூமியும்
சுழன்று கொண்டிருக்கிறது
அந்த "நாளை" யை எதிர்பார்த்து.

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இக்பால் அலி**

# உன்னைப் போல

மகாகவியே!
உன் முறையான கையேந்தல்கள்
இன்னும்
எம் கை மோதிரங்களாகவே உள்ளன.

உன் புனிதம் கெடாமல்
மிக அழ கழயாய்
உறை யுடை உடுத்து
யௌவனமாக்கிக் கொண்டோரே!
மனுக்குல நலன்களில்
உயிர்த்துடிப்போடு
அக்கறை கொண்டு
உலகப் புத்தகத்தில்
தத்தம் பெயர்களை
பதிவு செய்து கொள்கின்றனர்.

இதற்குச் சக்கரைப் பந்தலாய்
உன் மொழிபெயர்ப்புக்கள்
உன் பொழிப்புரைகள்
உன் அறிமுகங்கள்
சர்வதேச் சோலைகளில்
தேன் மழை பொழிகின்றன.

ஆனால் நாங்கள்
இன்னுமின்னும் சின்னஞ் சிறுசு போல
உன் அழகிய நூலின் உறைகளை
கழட்டி யெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசக்கி எறிகின்றோம்.
அது ஊத்தைக் கூடைக்குள்
தங்கத்தைப் போல
மினி மினிக் கொண்டிருக்கின்றது.

உன் தத்துவார்த்தப் பொருளின்
அழகிய தாளைப்
பியித்தெடுத்து
ஓடுகின்ற மழை நீரிலே
கப்பல் செய்து விளையாடுகின்றோம்
அது உலகறியாமல்
தண்ணீரிலே கரைகின்றது.

உன்னாலேயே
தீயை அணைக்கவும்
தீயை ஏற்றவுமுடியுமென
உன் மெய்ஞ்ஞானம் சொல்லுகிறது.
இன்னும் இவர்கள்
உண்மை உணராமல்
உன்னுணர்வைக் கிழித்து
தீ யிலிடுகின்றார்கள்.
அது கரிகினாலும்
அது மீண்டும் தானாகவே
அக்கினிக் குஞ்சுகளாய்ப் பிறக்கின்றது.

உன்னைப் பாதுகாத்துக்
கொள்ளத் தெரியாதவர்களாய்
நம்மவர்கள்
நாடான் கடைக்கு பணத்திற்காய்
மலிவு விலையில்
விற்கின்றார்கள்.
அதில் அவனோ
கொள்ளை இலாபம் பெற்ற பின்னர்
உன்னை இன்னுமொரு கடைக்கு
சில்லறையாய் விற்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் அவனும்
கொள்ளை லாபம் பெற்ற பின்னர்
வேறொருவனுக்கு விற்கின்றான்.
இவ்வாறாய்
உன்னைப் படித்தே
எல்லோரும் புத்தெழுச்சி பெறுகின்றார்கள்.

ஆனால்
உன் சொந்தக்காரர்கள்
குடிக்கத் தண்ணீர்த்தாக மென்றால்
தமது சொந்தங்களான ரத்தத்தின் ரத்தங்களின்
கண்ணீரைக் குடித்துக் கொப்பளிப்பார்கள்.
அந்த நீர்க்குழாயே
திறபட்டு
அநியாயமாய் எவ்வாறு ஓடிக் கொண்டிருந்தாலும்
அதைக் கண்டும் காணாதது போல
பார்த்து ரசிப்பார்கள்.
ஆனால் - நீ
திரிப்போலியில் ஓடிய குருதி ஆற்றுக்காய்
சூறாவளியாய் மாறினாய்
உன் கவிதைகள் அணு குண்டுகளாய் மாறி
பூமியெங்கும் வெடித்தன.
எதிரிகள் அதிர்ந்தார்கள்.

இவர்கள்
உன் நூலை மறுபதிப்புச் செய்வதிற்குப் பதிலாக
வேறு நூல்களை
பதிப்பித்த வண்ணம்
புதுப்பித்த வண்ணம்
ஆராய்ச்சி செய்த வண்ணம்
மலிந்து பிரிந்து கிடக்கிறார்கள்.

எங்கள் நூல் நிலையங்களில்
உனது நூல்கள் இல்லை
ராக்கைகளில்
வெறும் நூல்கள்தான் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் தேடிப் படிக்கத்
தவறியதன் காரணமாய்த்தான்
தெருவில் செல்லுகின்ற இனவாத மென்னும்
விசர் நாய்களின் குரைப்புக்கும்
கடிப்புக்கும் அஞ்சியஞ்சி
தொப்பிக்குள்ளேயும், பர்தாவுக்குள்ளேயும்
ஒழிந்து நடுநடுங்கும் நிலை
நிரந்தரமாய் போய் விட்டன.

மற்றவர்களைப் போல
சீர்பெற்று வாழ வேண்டுமென்ற
நல்லெண்ணம் இருப்பினும்
அந்த இலக்கை எட்டவோ
கிட்டவோ தட்டவோ இயலாதென
முகவுரையற்ற முடிவுரைகள்
எடுத்தியம்புகின்றன

ஏனென்றால்
உங்களிடமே
நேர்மையற்ற தன்மை
காழ்ப்புணர்ச்சி
பெருந்தன்மை
அறியாமை என்பன
நங்கூரமிட்டுள்ளன.

எனவேதான்
உங்களின் முறையீட்டு மனுக்கள் கூட
உரிய இடத்தை
அடைந்து கொள்ள இயலா நிலையில்
இடைநடுவில் தத்தளிக்கின்றது.

உங்களுக்குள்ளேயே
இந்த முறைகேடான முறையீடுகள்
ஊடறுத்து நிற்கின்ற சம்பிரதாயங்கள்தான்
சடங்குகளாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி வேந்தனே!
உன்னைப் போல
குறிபார்த்து சரியாய் எறியவோ
களத்துடுப்பாட்டம் ஆடவோ
வெற்றிவாகை சூடவோ
இயலா நிலையில்தான்
நாங்கள் கிரிக்கட் விளையாட்டைப் போல
அந்தத் தலைமைப் பந்துகளையும்
ஆட்களையும், அதியுயர் பண்பாடுகளையும்
கோட்பாடுகளையும் மாற்றி மாற்றிக் கொள்கின்றோம்.
அதனால்தான்
உலகக் கோப்பையை
மிக இலகுவில் வெற்றி கொள்ள முடியாதிருக்கின்றது.

உலக சஞ்சாரத்தில்
உங்களின் வாக்கிய பஞ்சாங்கம்
இருள் வெளியில் அஸ்தமனமாகி
உதிரிகளாய் உதிர்கின்றன.
உண்மையிலேயே
அது சூரியோதயம் பெற வேண்டுமென
நீங்கள் ஆத்மார்த்தமாக விரும்பினால்
முதன் முதலில்
தம் பள்ளி வாசல் மிம்பர்களை
உடைத் தெறிய வேண்டும்
அல்லது
மீண்டும் தூய கலிமாவைப் மொழிந்து
புனிதமாக்கிக் கொள்ள வேண்டும்.

மகாகவி இக்பாலின்
ஏகத்துவச் சிந்தனையை
இன்னுமின்னும் ஆழமாய்
சுழியோடிப் பார்க்கும் போதுதான்
புடம் போட்ட வெள்ளிபோல
இறக்கும் மார்க்கம்
இறவா வரம் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே
விஞ்ஞான மேன்மையை
உயர் வழிபாட்டுணர்வை
மனித குல நேயத்தை
சமாதான ஒப்புதலை
இடையுறின்றி
நிலை நிறுத்துக் கொள்ளலாம்.

வேத குர்ஆன், ஹதிஸில்
கட்டுண்டு
நபி கோமான் அவர்களின் வழி நடந்திட
அவர் உள்ளம் திறந்திறப் போமாயின்
உலகின் பன்னீர் தடாகத்தில்
இங்கே அழகிய புஷ்ப்பங்கள் மலரும்.

உங்கள் வாழ்வில்
உங்கள் இதங்களை
ஓர் நிலைப்படுத்தி
மகாவி போன்று
சீர் பெற் றெழ
சிறப் புரிமை பெறும்
அறிவுயர் தியாகங்களை
முறையீட்டு மனுக்களுடன்
உடனடியாய்
தொடர்படுத்திக் கொள்ளுங்கள
இக்பாலின் இதயங்களைப் போல.

⁕ ⁕ ⁕



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாமா இக்பாலின் சிந்தனை மீள் அறிமுகத்தைச் செழுமைப் படுத்துவதற்காக ஷிக்வா என்ற இக்பாலின் புகழ்பெற்ற தலைப்பில் கண்டி ஒறாபிபாஷா கலாசார நிலையத்தில் நடைபெற்ற கவியரங்கில் அரங்கேறிய கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

**எம்.எச்.எம். ஷம்ஸ்**

**கலாபூ சணம் ஏ. இக்பால்**

**பண்ணாமத்துக்கவிராயர்**

**மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்**

**கவிஞர் ஜின்னா ஹரிபுதீன்**

**கவிஞர் நிந்ததாசன்**

**ஷர்மிளா ஏ. றஹீம்**

**எஸ்.எல்.எம். கரீம்**

**லறீனா அப்துல் ஹக்**

**எம்.ஐ.எம். இர்பான்**

**டிக்கோயா எம்.எச்.எம் ஜவ்பர்**

**இக்பால் அலி**

ஆகிய முதுநிலைக் கவிஞர்களும் இளங் கவிஞர்களும் இக்பாலின் முறையீட்டை உள்வாங்கிக் கவிதைகள் தந்துள்ளனர். இலங்கையிலும் உலகிலும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அநீதிகளையும் அவலங்களையும் ஏனைய சகோதர மாந்தர் மீது தொடுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைகளையும் கவிஞர்கள் தமது பார்வையில் கண்டித்தும் எதிர்த்தும் மனிதாபிமானப் பேரோசை எழுப்பும் கவிதை அலைகளின் மொழிவழிச் சித்திரமே இம் முறையீட்டின் உள்ளடக்கமாகும்.

***இக்பால் அலி***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org